Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -20 04-07-2005 திங்கட்கிழமை ஓசை 136



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12401) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## அதிவேக உந்துருளி இரண்டாவது அணி

# பயிற்சி முடிந்து வெளியேற்றம்; தேசியத் தலைவர் மரியாதை ஏற்பு!

## சாகச நிகழ்வுகளும் இடம்பெற்றன

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளி இரண்டாவது அணியினரின் பயிற்சி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து அதிவேக உந்துருளி அணியின் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர் அதிவேக உந்துருளி அணியின் சாகச நிகழ்வுகள், தாக்குதல் ஒத்திகைகள் என்பவற்றைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வு லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்புத்தளபதி வேலவன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்டளைத்தளபதிகள், சிறப்புத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## இணைப்பு




கரும்புலிகள் நாளையொட்டிய வர்ணப்பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# உலகத்தமிழினத்தின் தலைவராக பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றார்!

### -விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தலைவர் திருமாவளவன்

(லண்டன்)

தமது நாட்டு மக்களின் விடியலுக்காக போராடிக் கொண்டிருந்தாலும், உலகத்திலுள்ள அனைத்து தமிழ் மக்கள் மீதும் அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ள மேதகு வே.பிரபாகரன் அவர்கள் உலகத் தமிழினத்தின் தலைவராக விளங்குகின்றார் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழின உணர்வாளருமான தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

ஈழமுரசின் "இனியமாலை 2005 இன் முதல் நாள் நிகழ்வில் பங்கேற்று சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காலக்கெடு குறித்து ஆராய கண்காணிப்புக் குழு-படையதிகாரிகள் சந்திப்பு!

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யுமாறு வலியுறுத்தி விடுதலைப்புலிகள் விதித்த காலக்கெடு தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கும் படை உயரதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

14.07.1994 அன்று சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கித்தாக்குதலின் போது தமிழீழத் தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவ டைந்துள்ளார்.

தமிழீழத் தேசியத் துணைப் படைவீரர் ராஜூ (தங்கத்துரை-ராஜூ,தங்கபுரம், பள்ளிக்குடியிருப்பு)

17.12.1998 அன்று சிறிலங்கா இராணுவம் தோப்பூர் பகுதியில் பதுங்கித் தாக்கியபோது தமிழீழத் தேசியத் துணைப் படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

தமிழீழத் தேசியத் துணைப்படை வீரர் திருச்செல்வம்சோமசுந்தரம்-திருச்செல்வம் (செல்வன்) பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்).

11.09.1994 அன்று கஜமுந்தன் குளத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதலின்போது தமிழீழத் தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




(படம்: சோதி)

# கரும்புலிகள் நாளை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் தீவிரம்

(நமது நிருபர்)

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உன்னத தற்கொடையாளிகளாகிய கரும்புலிகளை நினைவுபடுத்தும் நாளாகிய கரும்புலிகள் நாள் நாளை தமிழீழப் பிரதேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தியாகியுள்ளன. சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும், நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டும் சகல பிரதேசமும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளன.

குடாநாட்டில் தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய நான்கு கோட்டங்களிலும் கரும்புலிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**K.S.K கணினி நிலையத் தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் 11. 07. 2005**

புதுக்குடியிருப்பில் இயங்கும் எமது கணினி நிலையத்தில் கல்வி கற்ற,கற்று வருகின்ற அனைத்து மாணவர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 09.07.2005 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற விருப்பதால் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
நிர்வாகம் (6320)

**வீடுவிற்பனைக்கு**

பரந்தன்-முல்லை வீதியில் தேவிபுரம் சந்திக்கு அண்மையில், ஒரு ஏக்கர் காணியிலமைந்த கட்டுக் கிணறு, மலசலகூடத்துடன் அமைந்தவீடு விற் பனைக்குண்டு. தொடர்பு 2227586/0776910625 (6324)

## குரங்குகள் அதிகரிப்பால் விவசாயிகள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் குரங்குகள் எண்ணிக்கை அதிகரிப்பால் விவசாயிகள் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். மரவள்ளி மரக்கறித்தோட்டங்கள் முதல் மாங்காய், கொய்யாக்காய் மற்றும் வாழைமரங்களை கூட்டமாய் வரும் குரங்குகள் பறித்து அழித்து வருவதாகவும், குரங்குகள் தமது உணவு தேவைகளுக்காய் தோட்டங்களை அழித்து வருவதாகவும் இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை சந்தித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (28)

# விடுதலைக்கான காலம் நெருங்கிவிட்டது

## அதற்காக எங்களைத் தயார்படுத்துவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன்



(அலுவலக செய்தியாளர்)

தமிழர்களாகிய நாங்கள் விடுதலை என்கின்ற உணர்வோடு செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த விடுதலை உணர்வை வலுவாக்க வேண்டும். அவ்வாறு வலுவாக்கி எங்களது விடுதலையைவென்று கொள்ள இன்றே அனைவரும் எங்களை தயாராக்கிக்கொள்ள வேண்டும்.இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று கிளிநொச்சி பண்பாட்டுமண்டபத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேராளர் மாநாட்டில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அந்த விடுதலையை நாங்கள் வெறுமனவே வென்று கொள்ள முடியாது. இது நாங்கள் வரலாற்றில் கண்ட உண்மை. விடுதலை என்ன விற்பனைச் சரக்கா, வீதிக் கடைகளில் விற்பனைக்குண்டா? விடுதலை என்ன புடலங்காயா? போர்க்களம் நோக்கிப் போ விடுதலை கிடைக்கும். விடுதலை என்பது போர்க்களம் நோக்கிப்போனால் தான் கிடைக்கும் என்பதை எங்களுடைய தமிழினம் உணர்ந்துள்ளதுடன் இறு[illegible] முடிவானதுமான ஒரு கட்டத்திற்கு இன்று தமிழர்களாகிய நாங்கள் நகர இருக்கின்றோம்.

இதை பாராளுமன்றத்தில் கூட தெளிவாகச் சொன்னோம். நாங்கள் அனுபவிக்கப்போகிற துன்பம் என்பது பிரசவத்தின் கடைசி நேரத்தில் தாய் என்பவள் எப்படி வேதனைப்படுகிறாளோ அந்தப் பிரசவ வேதனையை நாங்கள் அனுபவித்தாலும் பரவாயில்லை. நாங்கள் பெற்றுக் கொள்ளுகின்ற சுதந்திர தமிழீழம் என்னும் பிள்ளை இந்த நாட்டிலே சுதந்திர புருசராக, இந்த மண்ணிலே ஒரு நிம்மதியான வாழ்வை நடத்தக் கூடியவனவாகவாழுகின்ற ஒரு சூழ்நிலை இந்தக் காலத்திலே ஏற்படுத்தும் என்பது திண்ணம், அதனை ஏற்படுத்துவதற்காக நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு தீர்க்கதரிசன சிந்தனையோடு எங்களது தேசியத் தலைவர் காட்டுகின்ற பாதையிலே அவருடைய தலைமையிலே எங்களை நகர்த்தி எமது வருங்கால சந்ததியினரின் சுபீட்சத்திற்கும், சுதந்திர வாழ்விற்கும் வழிசமைப்போமாக என்றார்.

(சோ)

## 5ஆம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில்
14.05.1972

தாயக மண்ணில்
04.07.2000

**முன்னாள் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளரும்**
**மாலதி படையணியின் துணைத்தளபதியுமான**
**லெப்.கேணல் நிஸ்மியா/ தாரணி**
**சிற்றம்பலம்-ரஞ்சிதமலர்**
(கொக்குத்தொடுவாய்)

வன்னிமண் பெற்றெடுத்த வரலாற்று நாயகியே
நெருப்பெரிந்த களமுனைகள் பலவற்றில்
நீ பாதம் பதித்து திரிந்த புயல்
கனிவு சுரக்கும் வழிகளால் எமையெல்லாம்
காத்து வளர்த்தெடுத்த அன்னையே.
பண்புதனை ஊட்டி அன்புதனை காட்டி
நெறிமுறையில் வளர்த்தெடுத்த அக்காவே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
துயிலாத விழிகளோடும், கனவுகளோடும்
கல்லறையில் கை தொட்டு சொரிகின்றோம்.

**என்றும் உன்நினைவினில்,**
**குடும்பத்தினர், போராளிகள்.**

(6325)

## சாவு அறிவித்தல்

### வைத்திலிங்கம்-குலசேகரம்பிள்ளை

சரவணையைப் பிறப்பிடமாகவும்,கந்தபுரம் இல: 268ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் - குலசேகரம்பிள்ளை 03.07.2005 (நேற்று) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அன்னபூரணியின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், ஈசன் (கனடா), கருணாகரன் (நோர்வே), கருணாநிதி (கனடா), தயாநிதி (கனடா), ஐங்கரன் (கனடா), ஆகியோரின் அன்புத்தந்தையும் கருணாதேவி (கனடா), வேலாயுதம் (கனடா), சிவராசா (கனடா), சுபாசினி (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், பேரம்பலம், குமாரசிங்கம், இராசசேகரம்பிள்ளை, இரத்தினம், கேதாரநாதன், நடேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், விசுவலிங்கம், மனோன்மணி, குமாரசாமி, அன்னலட்சுமி, திலகவதி, ஜெகராசசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6326)

## மின்சாரசபையை மறுசீரமைக்க அரசு காலஅவகாசம் கோரியுள்ளது

(கொழும்பு)

சிறிலங்கா மின்சாரசபையை மறுசீரமைக்க கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சிறிலங்கா அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரசபையை சீரமைக்க கடந்த வாரம் வியாழக்கிழமை இறுதிக்கெடுவை ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஜப்பானிய வங்கியும் விதித்திருந்தன.

ஆனால் கடந்த புதன்கிழமை இந்த இரு நிறுவனங்களுக்கும் சிறிலங்கா அரசு சார்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மறுசீரமைப்புக்கான பணிகளை மேற்கொள்ள கூடுதல் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே மின்சாரசபை தனியார் மயமாக்கப்படமாட்டாது என்று மின்சார துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி அளித்துள்ளார். கடன் மற்றும் கட்டண மாற்றங்கள் உள்ளிட்ட மறு சீரமைப்புக்களையே கூட்டமைப்பு அரசு மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு மல்லாவியில் சிரமதானம்

(மல்லாவி)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு மல்லாவி மாவட்ட நீதிமன்றில் சிரமதானப்பணிகள் நேற்றுக்காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.00மணி வரையும் இடம்பெற்றது.

மல்லாவி நீதிமன்ற நீதியாளரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிமன்ற பணியாளர்களால் நீதிமன்ற வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளப்பட்டனர்.

(24)

## கட்டட நிர்மாண பயிற்சிக்கு விண்ணப்பிக்க வேண்டுகோள்

யாழ். மாவட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கான கட்டநிர்மாண தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கவுள்ளதாக உலக வங்கியின் வடக்குக் கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஒருவருக்கு நாளொன்றுக்கு 250 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதன்படி பயிற்சி பெற விரும்புவோர் உலக வங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் யாழ். செயலகக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். மேசன்பயிற்சி மற்றும் தச்சுவேலைப் பயிற்சி என்பன இதில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(33)

## 28 பின்தங்கிய கிராமங்களுக்கு கார்ப் திட்டத்தில் மின்சாரம்

### - அனுமதிக்காக காத்திருப்பு

(தென்மராட்சி)

யாழ். குடா நாட்டில் மின்சார பற்றாக்குறையைப் போக்கும் நோக்கோடு கார்ப்திட்டத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாத 28கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனம் மின்சாரம் வழங்கத் தயாராக இருப்பினும் இதுவரை இலங்கை மின்சார சபையின் அனுமதி கிடைக்காமல் இருப்பதாகவும் அனுமதி கிடைத்தவுடன் இவ்வேலைத் திட்டங்கள் தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (28)


## ஆங்கிலம் பேச, எழுத,வாசிக்க

### இ-றஜித் இங்லிஷ்

**புதுக்குடியிருப்பில் புதியபிரிவு ஆரம்பம் அடிப் படையில் இருந்து கற்பிக்கப்படும், பெயர் பதிந்தவர்களும், பெயர்பதிவு செய்யவுள்ளோரும் 04. 07. 2005 இன்று பி. ப–5. 00 மணிக்கு வருகை தரவும்**

இடம்:- பாஸ் அலுவலகம் முன்பாக.
முல்லை வீதி. புதுக்குடியிருப்பு. (5944)


## வெற்றி பெற்றவர்கள் இன்று சமுகம் தரவும்

(புதுக்குடியிருப்பு)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் பங்கு பற்றிய வீர வீராங்கனைகளைப் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறை செயலகத்திற்கு இன்றுமாலை 4.00 மணிக்கு சமுகம் தருமாறு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

யாழ்ப்பாணம்

# இஸ்ரேல் -பலஸ்தீன பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர தீவிரவாதிகளைஅமைச்சரவையில் இணைக்க பலஸ்தீனம் முயற்சி

(அம்லா)

**இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே நீண்ட நாட்களாக இருந்து வரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சிகள் மேற்கொண்டுவரும் நிலையில் பிரச்சினையைத் தீர்க்க பலஸ்தீன தீவிரவாதி களை அமைச்சரவையில் இணைக்க பலஸ்தீன அதிபர் முன்வந்துள்ளார்.**

இரு நாடுகளுக்குமிடையேயான சமரசத் திட்டத்தின்படி மேற்குக்கரையில் உள்ள காசாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் படைகளை வாபஸ் பெறுவதாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் அறிவித்துள்ளார். அதே நேரத்தில் பலஸ்தீனியர் களும் இஸ்ரேல் மீதான தங்கள் தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு வகை செய்யும் விதத்தில் பலஸ் தீனத்தில் உள்ள தீவிரவாத இயக்கத்தினரை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள பலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ் முன் வந்துள்ளார். அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளுமாறும் ஆயுதங்களை கீழே போடுமாறும், இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அதிபரின் இந்த அழைப்புப் பற்றி ஆலோ சனை நடத்தி விரைவில் முடிவு எடுப்பதாக 'ஹமாஸ்' என்ற தீவிரவாத இயக்கம் அறிவித் துள்ளது.

ஆனால் 'இஸ்லாமிக் ஜிகாத்' என்ற தீவிர வாத இயக்கம் அதிபரின் இந்த அழைப்பை நிராகரித்துள்ளது. அமைச்சரவையில் சேர மாட் டோம் என்று கூறியுள்ளனர். அதன் தலைவர் நபீஸ் அசாம் கூறும்போது, 'பலஸ்தீனத்தில் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர்கள் முழுவதுமாக வெளியேறாத வரை எங்கள் தாக்குதல் தொடரும்' என்று தெரிவித்துள்ளார்.



காசாவிலிருந்து தனது படையினரை இன்னும் ஆறு மாதங்களில் விலக்கிக்கொள் வது தொடர்பாக இஸ்ரேலிய அமைச்சரவை யில் நடைபெறும் விவாதத்தை அவதானிக்கும் இஸ்ரேல் பிரதமர் ஏரியர் ஷரோன், துணைப் பிரதமர் யூட் ஒல்மெட், பாதுகாப்பு செயலர் மெயமம் ஆகியோர்.

## பாகிஸ்தானில் தீ விபத்து

(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள எண் ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து ஏற் பட்டது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக் கப் போராடி வருகின்றனர். தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. உயிர்ச்சேதம் பற்றிய தகவலும் இல்லை.



ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் ஈராக்கியப் படையினர் நடத்திய தேடுதலில் கைது செய்யப்பட்ட இரு தீவிர வாதிகளைப் படையினர் கண்காணிப்பதையும், அவர்களை விடுவிக்கக் கோரி மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த முயலும் படையினரையும் படங்களில் காணலாம்.

## தீவிரவாதிகளிடமிருந்து விடுதலைபெற நாம் தியாகம் செய்தாக வேண்டும் -புஷ்



அமெரிக்காவுக்கு இது ஒரு சோதனைக்காலம். ஈராக்கில் தீவிரவாதிகளை முற்றிலும் ஒழிக்கும் வரை அமெரிக்கப் படை அங்கு நீடிக்கும். இதில் நான் உறுதியாக இருக்கி றேன் எனஅமெரிக்காவின் சுதந்திரதினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில் நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் புஷ் தெரிவித்துள்ளார். ஈராக்கில் நடக்கும் கார்க்குண்டுத்தாக்குதல்களை கண்டு துவண்டு விடப்போவதில்லை. தீவிரவாதிகளுக்கு எதிரான நமது போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்.

அமெரிக்காவின் சுதந்திரத்துக்காக நாம் பேராடினோம். அதற் காகப் பல தியாகங்களைச் செய்தோம். இப்போது தீவிரவாதத்தில் இருந்து விடுதலை பெற நாம் தியாகம் செய்தாக வேண்டும் இவ்வாறு ஜோர்ஜ்புஷ் கூறினார்.

அமெரிக்காவின் சுதந்திர தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி புஷ் நாட்டுமக்களுக்கு உரை நிகழ்த்தினார். ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதலில் காயமடைந்து அமெரிக்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுவரும் இராணுவ வீரர்களுக்கு ஜோர்ஜ் புஷ் ஆறுதல் கூறினார்.



ஈராக்கில் ஹிட் என்ற இடத்தில் அமெரிக்க, ஈராக்கியப் படையினரின் "வாள்" எனப்பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக் கையின் போது அமெரிக்க இராணுவ வாகனத்தைக் காவல் காக்கும் ஈராக்கியப் படையினர்.

## நிக்கரகுவாவில் பூமி அதிர்ச்சி

(மனகுவா)

மத்திய அமெரிக்க நாடுகளை நிக்கரகுவா மற்றும் கோஸ்டிரிகா நகரில் நேற்று முன்தினம் கடும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

இந்த நில நடுக்கம் 6.7 ரிச்டர் அளவில் பதிவானது. 30 வினாடிகள் நீடித்த இந்த நிலநடுக்கத்தின்போது கட்டடங்கள் கடுமையாக அதிர்ந்தன. இருந்தபோதிலும் பெரியளவில் பொருள் சேதமோ, உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 20 பேர் பலி; 20 இற்கு மேற்பட்டோர் காயம்

(பாக்தாத்)

பாக்தாத்தில் பொலிசுக்கு ஆட்களைச் சேர்க்கும் மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்கு தலில் 20 பேர் பலியாகினர். 21 பேர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், மனித வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத் தில் 20 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. காயம் அடைந் தோரில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என்றார்.

இந்நிலையில் ஷியா பிரிவின் மூத்த தலைவர் ஒருவர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஷியா பிரிவினர் கண்டன ஊர்வலம் நடத்தினர்.

## அமெரிக்க இராணுவத்தினரின் இழப்பீட்டுத்தொகை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களில் ஏராளமான அமெரிக்க ராணுவத்தினர் உயிரிழந்த நிலையில் இவர்களது குடும்பத்திற்கு அளிக்கப்படும் உதவித்தொகை போதுமானதாக இல்லை என்று புகார் கூறப்பட்டு வந்தது. இதனால் போரில் உயிரிழக்கும் இராணுவத்தினரின் குடும்பத்துக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி வீரர்களின் குடும்பத்துக்கு வரிப்பிடித்தம் எதுவும் இல்லாமல் ரூபா.50 இலட்சம் ரொக்கமாக வழங்கப்படும். இது தவிர காப்புறுதி முறையை குறைந்த பட்சமாக ரூபா இரண்டு கோடியாக அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் நடந்த போரில் 1,700 இற்கும் மேற்பட்ட இராணு வத்தினரும், ஆப்கானிஸ்தானில் 165 அமெரிக்க இராணு வத்தினரும் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவது குறிப் பிடத்தக்கது.


## தடையையும் மீறி ஜோர்டானில் சதாம் ஹூசேன் நாவல் விற்பனை

(அம்மான்)

ஆங்கில நாவல் புத்தக விற்பனையில் சாதனை படைத்த புத்தகம் ஹாரியாபாட்டர் .இதையும் மிஞ்சும் அளவுக்கு சதாம் ஹூசேனின் "இங்கிருந்து வெளியேறு உன்னை நாசமாக்கி விடுவோம்" என்ற தலைப்பில் எழுதியுள்ளசமீபத்திய நாவல் ஜோர்டானில் பரபரப்பாக விற்று தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

186 பக்கங்கள் கொண்டது இந்தப்புத்தகம், ஈராக்மீது படையெடுத்து வந்த அன்னிய நாட்டினரை, அரபு நாட்டு மலைவாசி ஒருவன் விரட்டி அடித்து தோல்வியடையச் செய்வ தாகக் கதை அமைந்துள்ளது. அந்த மலைவாசியால் ஜோர்டான்-ஈராக் உறவு பாதிக்கப்படுகிறது.

இந்தப்புத்தகத்துக்கு ஜோர்டானின் தடை விதிக்கப்பட்டது ஆனால் தடையையும் மீறி இந்தப் புத்தகம் பரபரப்பாக விற்பனை யாகி சாதனை படைத்துள்ளது.



துருக்கியின் கிழக்குப் பகுதியில் உள்ள லொசிக்கு பகுதி யில் தண்டவாளத்தில் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடி வெடித்ததில் அதில் பயணித்த புகையிரதம் தடம்பிரண்டது இதில் ஆறு பயணிகள் பலியானார்கள். 15- இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

## அமெரிக்க - இந்திய இராணுவ ஒப்பந்தம் தெற்காசியாவில் ஆயுதப்போட்டியை அதிகரிக்கும்

(இஸ்லாமபாத்)

இந்தியா-அமெரிக்க இராணுவ ஒப்பந்தம் தெற்காசிய பகுதியில் ஆயுதப் போட்டியை அதிகரிக்கச் செய்யும் என்று பாகிஸ்தான் கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவும், அமெரிக்காவும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இராணுவ ஒத்துழைப்பைப் பரிமாறிக்கொள்ள ஒப்பந்தம் செய் துள்ளன. இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி நிருபர்களிடம் கூறியதாவது,

இந்த ஒப்பந்தப்படி இந்தியா, அமெரிக்காவிடமிருந்து 'பேட்ரி யாட்' போன்ற ஏவுகணை ரகங்களையும், எப்-16 ரக போர் விமானங்களையும் கொள்முதல் செய்யும் வாய்ப்புள்ளது. இதனால் தெற்காசியப் பகுதியில் ஆயுதப் போட்டி உருவாகும் ஆபத்து இருக்கின்றது. பாகிஸ்தான் ஆயுதப்போட்டியில் கள மிறங்காது. தெற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்ட பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

ஐ.நா. சபையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் மண்டல அடிப்படையில் அமைய வேண்டும். பாதுகாப்பு சபையில் இஸ்லாமிய நாடுகளுக்கு தகுந்த பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். 51 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இவ்வாறு முகமது கசூரி கூறினார்.



யூதர்களைக் காட்டு மிராண்டிகள் என இஸ்ரேல் அரசு வர்ணிப்பதையும் ஏரியல் ஷரோன் படைகளை விலக்க தாமதிப்பதையும் எதிர்த்து பொலிஸ் நிலையம் முன்பாக சத்தியாக்கிரகம் நடத்தும் ஒரு பெண் வாயில் துணியைக் கட்டி எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்.

## தலிபான் தீவிரவாதிகள் 18 பேர் பலி

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் மத்திய பகுதியில் இருக்கும் உருஸ்கான் மாகாணத்திலுள்ள மலைப்பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை இராணுவம் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியதில் 18 தீவிரவாதிகள் கொல் லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து அங்கு சண்டை நடந்து வருவதாகவும் அங்கு மேலும் 100 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதுபற்றி இராணுவ அதிகாரி கூறுகையில், அவர்களை உயிரோடு பிடிக்க முயற்சி எடுப்போம். அது நிறைவேறாவிட்டால் சுட்டுக்கொல்வோம் என்று கூறினார்.

# கரும்புலிகள் நாளில் இரத்ததானம் முல்லை வைத்தியசாலையில் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நாளன்று முல்லைத்தீவு வைத்திய சாலையில் இரத்ததானம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ கடற்படையின் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் கரும்புலிகள் நினைவு நாளன்று முல்லைத்தீவு வைத்தியசாலையில் இரத்த தானம் செய்ய மக்கள் தயாராகி வருகின்றனர்.

முல்லைத்தீவின் பொக்கணை தொடக்கம் நாயாறு வரையுள்ள மக்கள் இவ் இரத்ததானத்தில் ஈடுபடவுள்ளனர். முல்லைத்தீவின் தேசிய எழுச்சிப் பேரவை, வர்த்தகசங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பணியாளர்கள் என அனைவரும் இவ் இரத்ததானத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது கடும் பாதிப்பை எதிர்நோக்கியபோதும் கரும்புலிகளின் நினைவாக இவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். (ச)

# திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழு தெரிவு

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு தியாகி திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழு தெரிவும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையின் மருத்துவர் செவ்வானம் தலைமையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கலந்துரையாடலில் எதிர்கால நடவடிக்கை குறித்தும் வளப்பற்றாக்குறை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அபிவிருத்திக் குழுத்தலைவராக சு.நாகராசா செயலாளராக கற்சிலைமடு அ.த.க.பாடசாலை ஆசிரியர் கருணாகரன், பொருளாளராக மா. விக்னேஸ்வரன் ஆகியோருடன் மேலும் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.இதில் கருத்துக்களை ஒட்டுசுட்டான் பிரதேசப்பொறுப்பாளர் தமிழரசன் வழங்கினார். (05)

# முல்லை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் வெற்றிடங்கள் பல நிரப்பப்படாதுள்ளன!

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு கால் நடை வைத்திய அதிகாரி பிரிவில் கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளதால் மக்களுக்கான சேவைகளை சீரான முறையில் செய்ய முடியாத ஓர் துர்ப்பாக்கிய நிலையில் முல்லைத்தீவு கால் நடைவைத்திய அதிகாரி பணிமனையினர் உள்ளனர்.

இப்பிரிவுக்கு ஐந்து கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் தேவையாகவுள்ள போதும் ஒருவர்மட்டுமே சேவையிலுள்ளார். செம்மலை தொடக்கம் விசுவமடு வரையிலான பரந்துபட்ட பிரதேச மக்களின் சேவையை இவர் ஒருவரே பூர்த்தி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் சேவை பாதிப்படையும் நிலையுள்ளது. (08)

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியோர் சுயதொழிலை மேற்கொள்ள உதவி

(அலுவலக செய்தியாளர்)


அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புலம்பெயர்ந்தோர்க்கான சர்வதேச அமைப்பினால் (ஐ.ஓ.எம்) இந்தியாவிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு சுயதொழிலினை மேற்கொள்ளும் வகையில் உபகரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமையன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில்வைத்து இந்தியாவிலிருந்து கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள 102 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா35ஆயிரம் ரூபா பெறுமதியுடைய அவர்களினது தொழில் முயற்சிக்கேற்ற வகையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், தையல்இயந்திரங்கள், உழவு மாடுகள், மர அரிவுப்பட்டறை உபகரணங்கள் மற்றும் ஒவ்வொருவரதும் சுயமுயற்சிக் கேற்ற வகையில் மேற்படி தொகைக்குரிய பொருட்கள் (ஐ.ஒ.எம்) நிறுவனத் திட்டப் பணிப்பாளர் அ.அ. உதயகுமாரினால் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

அதேபோன்று கடந்த 27 ஆம் திகதியன்று பளைப்பிரதேசசெயலகத்தில் வைத்து பளையில் மீளக்குடியமர்ந்த ஐந்து குடும்பங்களுக்கும் 28 ஆம் திகதியன்று பூநகரிபிரதேச செயலக உப பணிமனையில் வைத்து பூநகரி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள 32 குடும்பங்களுக்கும் 29 ஆம் திகதியன்று கண்டாவளை பிரதேசசெயலர்பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள 38 குடும்பங்களுக்கும் மேற்படி பொருட்கள் கையளிக்கப்பட்டன.

அதேபோன்று மீளக்குடியமர்ந்துள்ள மேற்படி குடும்பங்களில் காணி உரித்துடைய 105 குடும்பங்களுக்கு மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படுமென நிறுவனத்திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)




# வருமான அதிகரிப்புத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு உதவி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டஅக்கராயன் கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வருமான அதிகரிப்புத்திட்ட பயனாளிகளுக்கான உதவிவழங்கும் நிகழ்வு கடந்தவாரம் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் த.பு.கழக அக்கராயன் பிரதேச உதவிப்பணிப்பாளர் கோ. நல்லையா, போரூட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர்கள் சாந்தலிங்கம், நிறைஞ்சீலன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

மேற்படி நிகழ்வின் இறுதியில் கோழி வளர்ப்புக்கென ஐந்து பயனாளிகளுக்கு 36,000ரூபாவும், ஆடுவளர்ப்பிற்கென ஐந்து பயனாளிகளுக்கு 66,250 ரூபாவும், மீன் வியாபாரத்திற்கென இரண்டு பயனாளிகளுக்கு 30,400ரூபாவும், அழகக தொழிலுக்கென இரண்டு பேருக்கு 30,400 ரூபாவும், தையல் தொழிலுக்கென 37,160 ரூபாவும், சுயதொழிலுக்கென ஒருவருக்கு 15,880 ரூபாவுமாக மொத்தம் 2,16,030 ரூபா வழங்கப்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் போரூட், நொராட் நிறுவன நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் வருமான அதிகரிப்புத்திட்டத்திற்கென அக்கராயன் பிரதேச பயனாளிகளுக்கு மேற்படி நிதி வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தாய்சேய் சிகிச்சை நிலையங்கள் இயங்க நடவடிக்கை வேண்டும்

(முள்ளியவளை)

தாய்சேய் சிகிச்சை நிலையம் இன்மையால் தாய்மார் அவலப்பட்டு வருவதாக முல்லை. மாவட்ட தாய் சேய்நல வைத்திய பொறுப்பதிகாரி க.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் , புதுக்குடியிருப்பு கோம்பாவில், அளம்பில் போன்ற பகுதிகளில் தாய்சேய் சிகிச்சை நிலையம் இல்லாமையினால் பெருமளவான தாய்மார்கள் சிறுபிள்ளைகளுடன் இருக்க இடமும் இன்றி வெய்யிலில் படும் அவலம் வேதனையாக இருக்கின்றது. குறிப்பாக ஒட்டுசுட்டான் பகுதியில் சிறு ஓலைக் கொட்டிலில் தாய்சேய் சிகிச்சை நிலையமுள்ளது. பிரசவ நிலைமுதல் கர்ப்பிணிகள்வரை அவர்களை வைத்திய பரிசோதனை செய்ய முடியாத அவல நிலையிலுள்ளது. தளபாடவசதியோ மறைப்பு வசதியோ அற்ற நிலையில் நிலத்தில் பாய் விரித்து வைத்திய பரிசோதனை செய்ய வேண்டிய துன்பநிலை காணப்படுகின்றது. மேற்படி ஒட்டுசுட்டான் அளம்பில் பகுதிகளில் நிரந்தரமாக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை அக் கட்டடங்கள் திறந்து வைத்து பாவனைக்கு விடப்படவில்லை. (ஆ)




கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலகப் பாவனைக்கென ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியுடைய பிரதியாக்கல் இயந்திரத்தினை (ஐ.ஓ.எம்)புலம்பெயர்ந்தோர்க்கான சர்வதேச அமைப்பின் வடபிராந்தியத்திட்ட அலுவலர் அ.அ. உதய குமார் ...ணையத்தலைவர் இ.கணேசபிள்ளையிடம் நேற்று முன்தினம் ...ந்தார். (சோ)

## சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிநாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் துயிலும்இல்லம், மற்றும் பொது இடங்களில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி சிரமதான பணிகளில் பாடசாலை மாணவர்கள், நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொண்டர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (தீ)

## போக்குவரத்து பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-ஸ்கந்தபுரம் பிரதான வீதியில் கோணாவில் மரப்பாலத்திற்கு அண்மையில் உள்ள நீர்ப்போக்கி முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது. இதனால் இப்பாதையூடாக பயணம் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேற்படி சேதமடைந்த நீர்ப்போக்கியால் விபத்துக்களும் ஏற்படவாய்ப்புள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இக்குறையினை நீக்க முன்வர வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (15)

# சமகால நிலவரம் குறித்து வணிகர்களுடன் கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு)

இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழனன்று மாலை 4.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் அருள்நாதர் தலைமையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வணிகர்களுக்கு இடம்பெற்ற இவ் விசேட கலந்துரையாடலில் இன்றைய அரசியல் நிலைப்பாடு குறித்து புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் எடுத்துக்கூறினார், சிறப்புரையை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆற்றினார். (08)

# சூழல் தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் சிரமதானப்பணி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பொருண்மிய நிறுவனத்தின் அனுசரணையுடன் உலக சூழல் தினத்தை முன்னிட்டு குறுவில் வீதியில் கடந்த புதன்கிழமை சிரமதானப்பணிகள் இடம்பெற்றுள்ளன. குறுவில் நன்னீர் மீனவ சங்க தொழிலாளர்களும், மக்களும் ஒன்றிணைந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் வதியின் இருமருங்கும் சிரமதானம் செய்வதுடன் முன்பள்ளி கோயில் போன்ற இடங்களில் பயன்தருமரக் கன்றுகளும் நாட்டப்பட்டன.

இதில் பொருண்மிய நிறுவன அடம்பன்பிரதேச இணைப்பாளர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நீரியல் வள இணைப்பாளர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு இச்சிரமதானப்பணியினை மேற்கொண்டுள்ளனர்.

# இடைத்தங்கல் முகாம்களில் சுகாதார விழிப்புணர்வூட்டல்


(அலுவலக செய்தியாளர்)

கடந்த வாரம் இறுதிக் கிழமையில் வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதி இடைத்தங்கல்முகாம்களில் சுகாதார விழிப்புணர்வூட்டல் வீட்டுத்தரிசிப்பு என்பன இடம்பெற்றுள்ளன.


மேற்படி நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக முகாம் இணைப்பாளர் வெ. கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார். இதில் பொது சுகாதார பரிசோதகர் இளங்கோபுரம் சுகாதார தொண்டர்கள், தாளையடி வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வடமராட்சி கிழக்கு நல வாழ்வு அபிவிருத்தி தொண்டர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்ற மக்களுக்கு சுகாதார கருத்தூட்டல் வழங்கினார்கள். (தீ)


# லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின்


# அதிவேக உந்துருளி அணியின் பயிற்சி நிறைவில்.....
















# சுதந்திரக் கட்சிக்குள் வலுவடையும் அதிகாரப் போட்டி

உப்புள் ஜோசப்பர்னாந்து

(லங்காதீப)

தமிழில் வடிவேல்


1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து தாய்நாட்டைக் காப்பாற்ற சிறிமாவோ பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்தன, ருக்மன் சேனநாயக்க ஆகியோருடன் மட்டு மன்றி பிரேமதாசாவுடனும் இணையத் தயாராக இருப்பதாக ஜே.வி.பி தலைவர் றோகண விஜேவீர தெரிவித்தார்.



அவ்வாறு அவர் கூறியது பிரேமதாசாவின் காதுகளுக்கு எட்டாமலில்லை. அப்போது பிரதமர் பதவியிலிருந்த அவர் மிகவும் இக்கட்டான நிலையிலிருந்தார். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவது இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு அவர் அழைக்கப்படாமை-அதாவது அது பற்றி அவர் அறிந்திராமை, இரண்டாவது ஐ.தே.கட்சியுடனும் இந்திய அரசுடனும் முரண்பாட்டை வளர்த்துவிட்டு, அரச அதிகாரமும், ஐ.தே. கட்சியின் சனாதிபதி வேட்பாளராகும் வாய்ப்பும் கிடைக்காமல் செய்யும் சூழ்ச்சி என எழுந்த சந்தேகம், மூன்றாவது ஒப்பந்தத்தை எதிர்த்தால் வேட்பாளர் தகுதியையும் கட்சி ஆதரவாளர்களின் எதிர்ப்பு உருவாகி அதனால் தான் தோல்வியடையலாம் என்ற அச்சம் என்பனவையாகும்.

இவ்வாறு அவரிடம் எந்த அச்சம் இருந்தபோதிலும் தனது பிரதமர் பதவியைத்தக் குறிவைத்துக்கொள்வதில் அவர் குறியாக இருந்தார். அத்துடன் சனாதிபதி வேட்பாளராகும் விடயத்தில் போட்டி நடத்தினால் பிரதமர் பதவியையும் இழக்க நேரிடும் என்ற கருத்தும் காணப்பட்டது.பிரதமர் பதவியைத் தக்கவைக்க வேண்டுமாயின் கட்சியையும், சனாதிபதியையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டியபொறுப்பு அவருக்கு இருந்தது. ஆகவே யாருடனும் அவர் மோதிக்கொள்ளாமல் அமைதியாக இருக்கும் வழியைப் பார்த்துக்கொண்டார். அதனால் கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் இருந்தவாறு ஒப்பந்தத்தை எதிர்க்காமலிருந்தார்.

ஒப்பந்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கும் பொறுப்பை ஜே.ஆர் இவரிடம் ஒப்படைத்தபோதும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அதனை நிறைவேற்றினார். அது



தொடர்பாக ஆரம்ப உரையையும் நிகழ்த்தினார். அவருக்கு உள்மனதில் எதிர்ப்பு இருந்தபோதும் மனச்சாட்சிக்கு எதிராக அவர் ஒப்பந்தத்தை ஆதரித்து வந்தார்.அத்துடன் இது தொடர்பாக நேர்மையாகச் செயற்பட்டார். அதன் மூலம் கட்சி மீதும் சனாதிபதி ஜே.ஆர் மீதும் தமக்குள்ள பற்றை வெளிப்படுத்தினார். அதனாலேயே பிரேமதாசாவுக்கு சனாதிபதி வேட்பாளர் தகுதி ஜே.ஆரினால் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஜே.ஆரின் ஆதரவாளர்களும், பிரேமதாசாவின் ஆதரவாளர்களும் ஒன்று கூடி அவரின் வெற்றிக்காகப்பாடுபட்டனர்.

அதே போன்று 1988 ஆம்ஆண்டு சனாதிபதித் தேர்தலில் பிரேமதாச அமோக வெற்றிபெற்று சனாதிபதியானார். அவரின் வெற்றிக்கு இந்தியாவின் உதவியையும் ஜே.ஆர் பெற்றுக்கொடுத்தார். அதாவது இந்திய அமைதிப்படையின் உதவி வடக்குக் கிழக்கு மற்றும் மலையகத்திலும் தேர்தலை நடத்தி பிரேமதாசாவுக்கு வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தார். அதே போன்றே தெற்கில் ஜே.வி.பி யின் ஆதிக்கத்தை முறியடிக்க தனது நிறைவேற்றதிகாரத்தையும் வழங்கினார். இதற்கு இன்னும் ஒரு காரணமும் இருந்தது. அதாவது பிரேமதாசா தனக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்கா விட்டால் கட்சியிலிருந்தும; அர[illegible]தும் தான் விலகுவதாகக் கூறியிருந்தமையாகும்.

அவ்வாறில்லாமல் வேட்பாளர் நியமனத்தை பிரேமதாசா வற்புறுத்தி ஜே.ஆர். வழங்க மறுத்திருந்தால் பிரேமதாசா என்ற சனாதிபதி ஒருவர் இந்நாட்டில் அதிகாரத்தில் இருந்திருக்க முடியாது தவிர விஜேவீரவுடன் இணைந்து ஜே. ஆருக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டிருந்தால் அன்றே அழிவைச் சந்தித்திருப்பார்.

இந்த வரலாற்றுப்பாடங்கள் யாவும் இன்று பிரதமராகப் பதவியில் இருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். தான் அடுத்த சனாதிபதியாக போட்டியிடும் வாய்ப்பைப் பெறவேண்டுமானால் சந்திரிகாவின் விருப்பத்துக்கேற்ப அவர் நடந்து கொள்வது கட்டாயமாகும். அத்துடன் சனாதிபதித்தேர்தலில் அமோக வெற்றிபெற வேண்டுமானால் வடக்குக்கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழர்களின் ஆதரவுவாக்குகள் அவருக்கு முக்கியமாகும். ஆனால் இவற்றை கருத்திற் கொள்ளாமல் தற்போது சனாதிபதி சந்திரிகா சுனாமி பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரியதை மறுத்துள்ளார். ஜே.வி.பி யினர் சந்திரிகாவுக்கு எதிராகச் செயற்படுவதைப் பார்த்துக்கொண்டு அமைதியாகவும் உள்ளார். அன்று ஜே.வி.பி யினர் தாய்நாட்டைக்காக்க வருமாறு பிரேமதாசாவுக்கு அழைப்பு விடுத்தது போன்றே தற்போது மகிந்த ராஜபக்ஷவுக்கும்அழைப்பு விடுக்கின்றனர். ஜே.வி.பி யினர் இந்த அழைப்பை விடுவதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் நோக்கில் உள்ளனர். மகிந்த அந்த வலைக்குள் சிக்கிவிடுவாரா என்பது தற்போது கூறமுடியாதுள்ளது. உண்மையில் மகிந்த ராஜபக்ஷ அரசியல் குழப்ப நிலைக்குள்ளாகியிருக்கின்றார். ஜே.வி.பி யும் ஹெல உறுமய கட்சியும் ம[illegible]தலைக் கொண்டு தமது நோக்கத்தை அதா[illegible]பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்து[illegible]ந் தடுக்கும் நோக்கில் உள்ளன.

அதேபோல சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள சில ஜே.வி.பி ஆதரவாளர்களும் சந்திரிகாவுக்கு எதிரானவர்களும் இணைந்து ஒரு போராட்ட சக்தியை உருவாக்கி மகிந்தவையும் சந்திரிகாவையும் துரத்திவிட்டு சனாதிபதி வேட்பாளர் பதவியை கைப்பற்ற எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் மகிந்த ஜே.வி.பி யினரது நோக்கத்துக்கு ஏற்ப செயற்படாது விட்டால் கூட்டணிக்குள் அவரின் தலைமையை ஏற்கத் தயாராகமாட்டார்கள் என நினைப்போரும், சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்தி அவருக்குப் பின் கட்சித்தலைமையையும் சனாதிபதி பதவியையும் மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொள்வார் என நினைப்போரும் இருக்கின்றனர். மேற்படி இரண்டாவது கருத்தைக் கொள்வோர் ஜே.வி.பிக்கு எதிரான லங்கா சமசமாஜக்,கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொதுசன ஐக்கிய முன்னணி காலத்தில் மகிந்தவை முன்னர் சனாதிபதி வேட்பாளராக பிரேரித்தவர்களாவர்.

இவ்வாறான நிலையில் இரு சாராரையும் மகிந்தவால் திருப்திப்படுத்தவும் முடியாது. அதேவேளை எதிர்க்கவும் முடியாது. அவர் இப்போது தீர்க்கமான முடிவொன்றை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் எவ்வாறான இழுபறி நிலை காணப்பட்டாலும் கட்சியினதும் அரசினதும் தலைவியான சந்திரிகா அது தொடர்பில் எடுக்கும் முடிவுக்கு பாராளுமன்றில் கட்சிக்காரர்கள் அனைவரும் சமுகமளித்தே இருந்தனர்.

பொலநறுவை மாவட்ட எல்லைக்கிராமத்தைச் சேர்ந்தவரான மைத்திரிபால சிறிசே[illegible] பற்றி சிந்திக்காமல் பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. த[illegible]து சந்திரிகா கூட்டணிக்கு தலைமை வ[illegible]பவரான ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் செயலர் சுசில் பிரேமஜயந்த, முக்கிய உறுப்பினரான ஜெயரத்ன ஆகியோரும் அப்போது சமுகமளித்திருந்தனர். இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக கருத்துத் தெரிவிப்பவர்களே. எனினும் அவர்கள் சனாதிபதிக்காக விட்டுக்கொடுத்தனர். அத்துடன் ஜே.வி.பி யுடன் கூட்டமைக்க தோளோடு தோள்கொடுத்தவரும், சனாதிபதி வேட்பாளராக வரும கனவுடன் இருப்பவருமான அநுரா பண்டாரநாயக்கவும் இருந்தார். அவர் சனாதிபதியாகப் போட்டியிட்டால் அதில் வெற்றிபெறவும், மக்கள்ஆதரவைப் பெறவும் ஜே.வி.பியை நம்பியிருக்கிறார். அவரும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் இவற்றை மறந்து ஆதரவாகவே செயற்படுகின்றார்.

அடுத்ததாக இவர்கள் பிரதமராகும் கனவுடன் இருந்ததுடன் அதற்குத்தகுதியுடையவர்களுமாக இருந்தனர். இவர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு கடந்த வருடம் சந்திரிகா மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியமை தன்னையும், கட்சியையும் இவர் பாதுகாப்பார் என சந்திரிகா கருதியமையினாலாகும்.

ஆயினும் இவை யாவற்றையும் மறந்து தனது பிரதமர் பதவியின் நிலைப்பாட்டையும் மறந்து சனாதிபதி வேட்பாளர் நியமனத்தை மட்டும் சிந்தித்து அரசியல் வியூகத்தை அமைத்துள்ளார். அமைத்துக்கொண்டு சனாதிபதியும் கட்சியும் மிக இக்கட்டான நிலைக்குள்ளாகக் காரணமான பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் வேளை பாராளுமன்றுக்கு சமூகமளிக்காதுவிட்டார்.

ஆகவேதான் ஒரு பிரேமதாசா போன்று உயர்ந்த நிலைக்கு வருவதிலிருந்து தவறிழைத்து விட்டார். பிரேமதாசா 1988 ஆம் ஆண்டு சனாதிபதியாகப் போட்டியிட்டது ஜே.ஆரின் வலக்கையான றஞ்சன் விஜயரத்தினவின் ஆதரவுடனேயே. மகிந்த பிரதமர் பதவியை ஆபத்துக்குள்ளாக்கி சனாதிபதி வேட்பாளர் தகுதியைப்பெற நினைப்பது சந்திரிகாவுடனும், அவரது ஆதரவாளர்களுடனும் மோதுவதற்கு சமனாகும். ஜே.வி.பி யுடன் மட்டுமன்றி மகிந்த மீதும் பொறாமை கொண்ட ஐ.தே.கட்சிக்கு தேவையாயிருப்பது இவ்வாறான மோதலை உருவாக்குவதே. அதற்குள் மகிந்த சிக்கிவிடாது விடில் மகிந்த கரைசேர்வார்.

# 23.06.2005-29.06.2005




23.

- ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற பல்வேறு குண்டு வெடிப்புக்களில் 40 பேர் பலி; 50 பேர் காயம்.

- திருவெற்றியூரிலுள்ள கார்கில் நகரருகே நகரசபைக்குச் சொந்தமான இடத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப்பட்ட 2200 வீடுகள் தீ விபத்தின் காரணமாக எரிந்து நாசம்.



- உலகின் செல்வந்த நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி-8 அமைப்பின் மாநாடு லண்டனில் ஆரம்பம்.

24.

- ஈரான் அதிபர் தேர்தலில் யாருக்கும் வெற்றி கிடைக்காத நிலையில் இரண்டாவது தடவையாக இடம் பெற்ற தேர்தலில் தெஹ்ரான் பழமைவாத முன்னாள் மேயர்முகமது அமதீனி வெற்றி.



- காஷ்மீர் தலைநகர் சிறிநகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள வடக்கு போர்ஷோர்சாலையில் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலி; 20 பேர் படுகாயம்.

- நேபாளத்தின் மேற்குப்பகுதியில் உள்ள கானாகிராமத்தில் படையினருக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்குமிடையில் நடந்த சண்டையில் 12 பேர் பலி; மேலும் குல்மிமாவட்டத்திலுள்ள 90 பள்ளிக் குழந்தைகள் உட்பட 340 பேர் தீவிரவாதிகளால் கடத்தல்.

25.

- இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டது இது ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளியாகப்பதிவானது.

- ஈராக் தலைநகர் பாக்தாத்தின் வடகிழக்கே உள்ள காலேஸ் நகரில் உள்ள இராணுவ தேநீர் கடையில் நடந்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 23 பேர் உடல் சிதறிப் பலி; 29 பேர் படுகாயம்.




- கொலம்பியாவில் புடுமாயோ மாகாணத்தில் ஈகுவடோர் நாட்டு எல்லையில் படையினர் மீது மாவோதீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 25 இராணுவத்தினர் பலி; 19 பேர் காணாமல் போயுள்ளனர்.

- பாகிஸ்தானில் மசூதிகளை குண்டு வைத்து தகர்த்து வந்த தீவிரவாத அமைப்பின் முக்கிய தளபதி உட்பட நான்குபேர் அந்நாட்டு பொலிசாரால் கைது.

26.

- ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பொலிசார் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஐந்து பொலிசார் பலியானதுடன் மேலும் 12 பேர் காயமடைந்தனர்.

- தமிழகம் மாமல்லபுரம் அருகே தனியார் நிறுவன ஊழியர்கள் சென்ற சிற்றூர்தியும் எதிரேவந்த பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் எட்டுப்பேர் உடல் நசுங்கிப்பலி.



- ஈராக்கின் தென்கிழக்கு நகரான மொசூலில் பொலிஸ்தலைமை அலுவலகம் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை குண்டுத்தாக்குதலில் 33 பேர் பலி.



- சுதந்திர பிரகடனத்தின் 50 ஆவது ஆண்டு நினைவு விழாவை தென்னாபிரிக்கா கொண்டாடியது.

27.

- மெக்சிக்கோவில் கடத்தல்காரர்களின் பிடியிலிருந்த 43 பணயக்கைதிகள் பொலிசாரினால் மீட்கப்பட்டனர்.

28.

- பிலிப்பைன்ஸ்மின்டனோதீவில் முஸ்லிம் குடும்பங்களுக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 15 பேர் பலி; 25 இற்கும் மேற்பட்டோர் காயம்.

- இந்தியாவும் அமெரிக்காவும் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன வோஷிங்டனில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- இந்தியாவில் பெற்றோல், டீசல், விலை உயர்வைக் கண்டித்து பாரவூர்தி உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



- ஈராக்நாடாளுமன்றத்தின் மூத்த எம்.பி 81 வயதுடைய தாரி அல்வயாற் அவரது மகன் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர் தற்கொலைகுண்டு வெடிப்பில் பலி.

29.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குக் கடற்கரைப்பகுதிகளில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டதில் 50 இற்கு மேற்பட்டவீடுகளும் மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்தன.

- கிழக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்தீவிரவாதிகளால் கோனார் மாகாணத்தில் அமெரிக்க உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டதில் 17 அமெரிக்கப் படையினர் பலி.

- ஹெயிட்டியின் தலைநகரான போட் ஆயுபிரின்ஸில் ஐ.நா அமைதிகாக்கும் படைக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் ஆறு தீவிரவாதிகள் பலியானதுடன் ஐந்துபேர் காயமடைந்தனர்.

- அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் கடும்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இருவர் காணாமல்போயுள்ளதுடன் மூவாயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றம்.

- மேற்கு நேபாளத்திலுள்ள வைத்தியசாலைக்கருகில் மாவோகிளர்ச்சியாளர்களினால் வீசப்பட்ட குண்டினால் வீதியில் சென்ற 16 பொதுமக்கள் காயம்.

# ஆழிப்பேரலை நிவாரண நிதி
# பிரதமர் நிதியத்திலிருந்து மாயம்!

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென ஆரம்பிக்கப்பட்ட பிரதமர் நிதியத்திற்கு கிடைத்த பணத்தில் பல மில்லியன் ரூபாய் பணம் மாயமாய் மறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் கிடைக்கப்பெற்ற நிதி பிரதமர் நிதியத்தில் வைப்பிலிடப்பட்ட போதிலும் பின்னர் அந்த நிதி அதிலிருந்து எடுக்கப்பட்டு பிறிதொரு கணக்கிற்கு மாற்றப்பட்டது. பல மில்லியன் ரூபாய் மாற்றப்பட்ட இந்தத் தனியார் கணக்கானது ஹெல்ப் ஹம்பாந்தோட்ட என்றழைக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்கையில் சனாதிபதி வெளிநாட்டிலேயே இருந்தார். எனினும் அவர் நாடு திரும்பியதும் பிரதமர் நிதியத்திலிருக்கும் அனைத்து நிதியையும் சனாதிபதி நிதியத்திற்கு மாற்றுமாறு பிரதமருக்கு அறிவித்தார். எனினும் சனாதிபதியின் உத்தரவிற்கமைய பிரதமர் நிதியத்திலிருந்த மொத்த நிதியும் சனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படவில்லையென்பது தற்போது தெரியவந்துள்ளது.

பிரதமர் நிதியத்திலிருந்த பெரும் தொகை நிதி சனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்பட்டபோதிலும் ஹெல்ப் ஹம் பாந்தோட்ட எனும் தனியார் கணக்கிற்கும் குறிப்பிட்டளவு நிதி மாற்றப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டினால் சனாதிபதியின் உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொதுக்கட்டமைப்பு பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு

(கொழும்பு)

முடிந்தால் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பகிரங்க விவாதமொன்றை நடாத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென் ஜாதிகஹெல உறுமய சவால்விடுத்துள்ளது. அரசாங்க ஊடகங்கள் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான பொய்யான பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருவதாகவும், இந்த நிலையில் அரசாங்க ஊடகங்களில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பகிரங்க விவாதமொன்றை நடாத்தவேண்டுமெனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளடக்கப்படவில்லையென அரசாங்கம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தமானது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையை ஒத்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஜாதிகஹெல உறுமய,உயர் பாதுகாப்பு வலயங்கள் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லையென்பதை சனாதிபதி முடிந்தால் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் சவால் விடுத்துள்ளது.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு;
## அரச பிரதிநிதியாக ஜெயசுந்தர?

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பிற்கான சிறிலங்கா அரசின் பிரதிநிதியாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி ஜெசுந்தரவை நியமிக்க தீர்மானித்துள்ளதாக சிறிலங்காவின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள கலாநிதி ஜெயசுந்தர சிறிலங்காவிற்குத் திரும்பிய பின்னர் சனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சனாதிபதிசந்திரிகா குமாரதுங்கவால் அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்கள் மூவரும் அதிகாரிகள் மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகிய மூன்று அமைச்சர்களுடன் சனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, சனாதிபதியின் செயலாளர் கருணாரட்ண, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகிய மூன்று அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பு நகரில் கலகம்அடக்க 650 பொலிசாருக்கு பயிற்சி

கொழும்பு நகரில் குழப்ப நிலை ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் பொலிஸ் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென தெரிவு செய்யப்பட்ட 650 பொலிசாருக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் திறமை வாய்ந்த 250 பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். இந்த அதிகாரிகளுக்கு சாதாரண சட்டத்தின் கீழ் செயற்பட்டு குழப்பம் விளைவிப்போரை கலைப்பது குறித்து விசேட பயிற்சி வழங்கப்படுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிகள் கொழும்பு பொலிஸ் படைத் தலைமையகத்தில் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். குழப்பம் விளைவிப்போரைக்கலைக்கும் போது அவர்களுக்கு உடல் ரீதியாக எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பது குறித்தும் இவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிற்சியை முடித்துக்கொள்ளும் பொலிஸ் அதிகாரிகள் கொழும்பு நகரின் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுவார்கள் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

unicef

வெண்புறா WHITE PIGEON

# கண்ணிவெடி விழிப்புணர்வு

## பாடசாலை மாணவர்களுக்கு அன்பான வேண்டுகோள்

அன்பார்ந்த பிள்ளைகளே!

நீங்கள் தான் எமது மண்ணின் வருங்கால நிர்மாணிகள். நீங்கள் சிறுவர்களாக இருந்தாலும் எதிர்காலத்தில் பலதுறைகளிலும் பார்புகழும் விற்பன்னர்களாகக் கூடிய திறமைகள் உங்கள் ஒவ்வொருவர்களுக்குள்ளும் மறைந்து கிடக்கின்றன. திறமைகளை வெளிக்கொணரும் பணிகளில் மூலாதாரமாகவே உங்கள் பள்ளிப்பருவம் அமைகின்றது. இதற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்வது எப்படி? உங்களைச் சுற்றிலும் பயங்கரமாக உருவெடுத்திருக்கும் கண்ணிவெடிகள் ஏனைய வெடிபொருட்களின் ஆபத்துக்களிலிருந்து தினமும் உங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி? சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம். அதேபோல் உங்கள் உள்ளமும் உடம்பும் உறுதியாக இருந்தால் மட்டுமே கல்லூரியைத் தொடர்ந்து கலாசாலை வரை செல்லமுடியும். சரி, இப்போது நீங்கள் வெடிபொருட்களின் ஆபத்துக்களிலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்வதற்கு கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள் யாவை?

- கண்ணிவெடிகள் சம்பந்தமான சகல கருத்தரங்குகளிலும் பயிற்சி வகுப்புக்களிலும் தவறாது பங்கு கொள்ள வேண்டும்.
- எமது மண்ணில் இலட்சக்கணக்கிலான கண்ணிவெடிகளும் வெடிபொருட்களும் மறைந்து கிடக்கின்றன என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.
- அவை எந்நேரமும் வெடிக்கக்கூடிய நிலையில் இருப்பதுடன் எமது உயிருக்கும் உடலுக்கும் சவாலாயிருக்கின்றன.
- அடையாளம் காணப்பட்ட இடங்களில் மட்டுமே பாதுகாப்பு வேலிகள் இடப்பட்டுள்ளன. ஏனைய இடங்கள் அடையாளம் காணப்படவில்லை அல்லது வேலியிடப்படவில்லை.
- புதிய இடங்களுக்குச் செல்லும் போது ஏற்கனவே பாவனையிலுள்ள பாதைகளையே பயன்படுத்த வேண்டும்.
- ஐமிச்சமான பொருட்களைத் தொடாமல் இருப்பதுடன் அவை சம்பந்தமான தகவல்களை உரியவர்களுக்கு அறியத்தரவேண்டும்.
- தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குள் எக்காரணம் கொண்டும் உட்செல்லக்கூடாது.
- அபாயக்குறியீடுகளையும் எச்சரிக்கைப் பலகைகளையும் அனுசரித்து நடப்பதுடன் அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும்.

மேற்குறித்த குறைந்தபட்ச எச்சரிக்கைக் குறிப்புக்களை எந்நேரமும் மனதில் இருத்தி கண்ணிவெடி அபாயங்களில் இருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதுடன் எதிர்காலத்தில் கல்வியில் சிறந்த மாமனிதர்களாக உருவாகி இந்த மண்ணிற்கு அளப்பெரிய சேவையாற்றவேண்டுமென ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

**வெண்புறா நிறுவனம் - வன்னி**

(6321)



# பா.ஜ.தலைவர் பதவியிலிருந்து விரைவில் அத்வானி நீக்கப்படுவார்

## முலாயம்சிங் யாதேவ்

பா.ஜ. தலைவர் பதவியிலிருந்து அத்வானி விரைவில் நீக்கப்படுவார் என்று உத்தரப்பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதேவ் கூறினார்.

தொடர்ந்து முலாயம்சிங் யாதேவ் கூறியதாவது,

காங்கிரஸ்.பா.ஜ.வுக்கு மாற்றாக மூன்றாவது அணி அமைப்பது தொடர்பாக மார்க்சிய கம்யூனிஸ்டு பொதுச்செயலாளர் பிரகாஷ் கரத்தும், நானும் விவாதித்தோம். நாங்கள் என்ன பேசினோம் என்பதை இப்போது சொல்லமாட்டோம். உரிய நேரம் வரும்போது வெளியிடுவேன். இடதுசாரி கூட்டணி இல்லாமல் நாட்டில் மூன்றாவது அணி அமைக்க முடியாது அதை உறுதியாகச் சொல்வேன்.

காங்கிரசும்,பா.ஜவும் தங்கள் செல்வாக்கை இழந்து கடுமையான நெருக்கடியில் உள்ளன. பா.ஜவைப் பொறுத்தவரை அது பெரும் குழப்பத்தில் இருக்கிறது.அதன் தலைவர் பதவியில் இருந்து அத்வானி நீக்கப்படலாம் என்ற வதந்திகள் உலவுகின்றன.

பா.ஜ வுக்கும், சங்பரிவார் அமைப்புக்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து மோதல்களைத்தீர்க்க அந்த அமைப்பின் தலைவர்களை ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் சந்தித்தது தவறானது.

சோசலிச கொள்கையைக் கொண்ட ராம்மனோகர் லோகியாவுடன்நெருக்கம் உள்ள ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆர்.எஸ். எஸ். இயக்க கதவுகளைத்தட்டி இருக்கக் கூடாது என்று கூறினார்.



வேளாங்கண்ணியில் இந்திய சனாதிபதியைப் பார்ப்பதற்காக வீதி ஓரம் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவுக்கு ஐ.நா.உறுப்பினர் பதவி ஆதரவளிப்பதாக இங்கிலாந்து அறிவிப்பு

ஐ.நா வில் நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கவேண்டும் என்ற இந்தியாவின் கேரிக்கைக்கு இங்கிலாந்து ஆதரவு தெரிவித்துள்ளது.ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு சபையிலிருந்து நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கவேண்டும் என்று இந்தியா வற்புறுத்தி வருகிற நிலையில். இதை ஆதரித்து இந்தியா,ஜப்பான், இத் தாலி,பிரேசில் ஆகிய நாடுகள் அடங்கிய ஜி-4 நாடுகள் அமைப்புத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத்தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், இந்தியாவின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று இந்தியா கோருவதில் நியாயம் இருப்பதாகவும் இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதர் மைக்கேல் ஆர்தர் கூறியுள்ளார்.

# அறிவித்தல்-நியாப்திட்டம்-II

## கிராமிய அபிவிருத்தித் திட்ட (VDP)அங்கீகாரம் பெறல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நியாப்–11 திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 25 கிராமங்களின் கிராமிய அபிவிருத்தித்திட்டங்கள் (VDP) பிரதேச செயலர் மட்டத்தில் அங்கீகாரம் பெறவேண்டியுள்ளமையால் பின்வரும் கால அட்டவணையின் பிரகாரம் பிரதேச செயலாளர்கள் நியாப்திட்டத்துடன் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரைத் தவறாது சமுகம் தந்து கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | பிரதேச செயலர் பிரிவு | திகதி | நேரம்(தமிழீழ நேரம்) |
|---|---|---|---|
| 01 | கரைச்சி | 05.07.2005 | காலை 10.0 மணி |
| 02 | பூநகரி | 05.07.2005 | பிற்பகல் 02.00 மணி |
| 03 | பச்சிலைப்பள்ளி | 06.07.2005 | காலை 10.00 மணி |
| 04 | கண்டாவளை | 06.07.2005 | பிற்பகல் 02.00 மணி |

* கலந்துரையாடல்கள் யாவும் அவ்வப்பிரதேச செயலகங்களில் நடைபெறும்.

எந்திரி,ஏ.சி.வினோதராஜ்
பிரதித்திட்டப் பணிப்பாளர்,
நியாப்,
கிளிநொச்சி.

(சி.12248)

# இந்தியாவில் விமானப்படைத் தளத்தை தகர்க்க முயன்ற தீவிரவாதிகள் கைது

இந்தியாவில் விமானப்படைத் தளத்தை தகர்க்க முயற்சி செய்ததாக நான்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் டில்லியில் கைது செய்யப்பட்டனர்.

காஷ்மீரைச் சேர்ந்த நான்கு தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அரியானா மாநிலத்தில் இருந்து தலைநகர் டில்லிக்குள் நுழைந்தனர். விமானப்படைத் தளத்துக்கு ஒரு கி.மீ தூரத்திலுள்ள கபாசேராப் பகுதியில் இவர்கள் சந்தேகத்துக்குரிய விதத்தில் நடமாடியதைப் பொலிசார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து சிறியளவில் துப்பாக்கிச் சண்டை நடத்தி அந்த நான்கு பேரையும் பொலிசார் கைது செய்தனர் அவர்களிடம் இருந்து ஆயுதம், வெடிமருந்து, இராணுவச் சீருடை, விமானப்படைத் தளத்தின் வரைபடம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. விமானப்படை தளத்தை தகர்க்கும் நோக்கில் அவர்கள் டில்லி வந்திருப்பது தெரிய வந்தது பிடிபட்ட தீவிரவாதிகள் அனைவருமே இஸ்லாமிய முன்னணி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள் அதில் மசூத் (வயது-33) என்பவர் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியில் இருந்து விலகி கடந்த 2000ஆம் ஆண்டில் இஸ்லாமிய முன்னணியில் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.டில்லியில் விமானப்படை தளத்தைத் தகர்க்க முயன்ற நான்கு தீவிரவாதிகள் பிடிபட்டிருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1981 - 08 - 02

மறைவு
2005 - 05 - 24

## திருமதி V. தங்கா

(4 ஆம் வட்டாரம்,புது)

அன்பாக எங்களை
வழிநடத்தினீர்கள்
இறுதியில் எங்களைப்
பிரிந்து இறைவனடி
சேர்ந்தீர்களே உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம்
வேண்டுகின்றோம்.

ஞ.வசந்தன்,
குடும்பத்தினர்

(6315)

## பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலை

# பணிநிலை வெற்றிடங்கள்

கிளிநொச்சி நகரப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் பின்வரும் தரத்திலான பணியாளர் வெற்றிடங்களுக்கான நேர்முகப்பரீட்சை 09.07.2005 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் இடம்பெறவுள்ளதால் குறிப்பிட்ட தகுதியுடையோர் 05.07.2005 திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் தமது விண்ணப்பங்களை "நிர்வாக அலுவலர் ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை வட்டக்கச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

| எண் | பணிநிலை விபரம் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01 | தொழிற்சாலை முகாமையாளர் | தொழிற்சாலை முகாமைத்துவத்தில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் தொழிற்சாலையின் வர்த்தகப் பிரிவு இவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருக்கும். |
| 02 | உற்பத்தி முகாமையாளர் | பாற்பொருள் உற்பத்தியில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உற்பத்திப் பொருட்களின் தரக்கட்டுப்பாடு இவரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் இருக்கும். |
| 03 | தொழிற்சாலை மேற்பார்வையாளர் | க.பொ.த (சா/த) இல் விஞ்ஞானம், கணித பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்கள் சித்தி. |
| 04 | இயந்திர இயக்குனர் | தொழிற்சாலை ஒன்றில் 05 வருடங்களுக்கு குறையாத இயந்திர இயக்குனர் அனுபவம். ஆங்கிலத்தில் பேசத்தெரிந்திருத்தல் அவசியம். தெரிவு செய்யப்படுபவர் வெளிநாடொன்றில் பயிற்சிக்காக அனுப்பப்படுவார். |
| 05 | கணக்காளர் | 03 வருடங்களுக்குக் குறையாத கணக்குப் பதிவுனர் தர அனுபவமும் பொதிகளைக் கணனியில் கையாளும் திறமையும் இருத்தல் அவசியம். |
| 06 | எழுதுனர் | க.பொ.த (சா/த) இல் தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி கணனியில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. |

ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை
வட்டக்கச்சி.

(சி-12238)




றொசான் முன்பள்ளி திறனாய்வு விழா நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு உதயநகர் கிழக்கு முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மேற்படி திறனாய்வு நிகழ்வில் ஈடுபட்டுள்ள சிறார்களினைப் படங்களில் காணலாம். (படங்கள்: சோதி)

# கரும்புலிகள் நாள் விளையாட்டுப் போட்டி

மாங்குளம் அரசியல்துறை ஆதரவில் மாங்குளம் இ[illegible]தென்றல் இளைஞர் கழகம் நடாத்திய மெ[illegible]ந்துப்போட்டியும், வலைப்பந்துப் போட்டியும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மென்பந்துப்போட்டியில் முதலாம் இடத்தினை வெலின்டன் விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தினை வண்ணன் விளையாட்டுக்கழகமும், வலைப்பந்தாட்டத்தில் முதலாம் இடத்தினை உதயசங்கர் விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தினை மின்னொளி விளையாட்டுக்கழகமும் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டன. வலைப்பந்தாட்டத்திற்கு நடுவர்களாக திருமதி கு.சிவகுமார், தம்பிராஜா ஆகியோர் கடமை ஆற்றினார்கள்.

# பட்டம் வென்றார் வீனஸ்



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவு ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனைகள் லின்ட்சேடேவன் போர்ட் - வீனஸ் வில்லியம்ஸ் மோதினார்கள்.

டேவன் போர்ட் விளையாடிக் கொண்டிருக்கும்போதே அவருக்கு முதுகில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. வலியால் அவதிப்பட்டுக்கொண்டே ஆடினார். அப்படியும் முதல் செட்டை கைப்பற்றினார். ஆனால், அடுத்த இரு செட்களிலும் வீனஸ் வில்லியம்ஸ் ஆவேசமாக விளையாடினார். டேவன் போர்ட்டும் விடாப்பிடியாக ஈடுகொடுத்து ஆடினார். கடைசியில் வீனஸ் வில்லியம்ஸ் 4-6, 7-6 (7-4), 9-7 செட் கணக்கில் வெற்றி பெற்று விம்பிள்டன் சம்பியன் ஆனார்.

விளையாட்டு

# வடக்கு கிழக்கு மாகாண போட்டிகளில் கால்பந்து போட்டியின் சில முடிவுகள்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப்போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் காலை, மாலை போட்டிகளாக நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்ட அணிகள் அரை இறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் திருகோணமலை மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியை 2-1 என்ற கோல் அடிப்படையிலும்,மன்னார் மாவட்ட அணி முல்லைத்தீவு மாவட்ட அணியை 6-0 என்ற கோல்கள் அடிப்படையிலும், யாழ்.மாவட்ட அணி அம்பாறை மாவட்ட அணியை 7-1 என்ற கோல்கள் அடிப்படையிலும், மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து விளையாடிய வவுனியா மாவட்ட அணியை மட்டக்களப்பு மாவட்ட அணி 2-1 என்ற கோல்கள் அடிப்படையிலும் வெற்றிபெற்றன. (கீ)


# யூனியர் உலகக் கிண்ண கால்பந்து ஆர்ஜென்டீனா சம்பியனானது

யூனியர் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டீனா சம்பியனானது.

இருபது வயதிற்கு உட்பட்டோருக்கான யூனியர் உலகக்கோப்பை கால்பந்து போட்டி நெதர்லாந்து நாட்டில் நடந்து வந்தது.

நேற்று முன்தினம் இறுதிப் போட்டி நடந்தது. ஆர்ஜென்டீனா, நைஜீரியா அணிகள் மோதின. இதில் ஆர்ஜென்டீனா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. தனக்கு கிடைத்த வாய்ப்புக்களை சாதகமாகப் பயன்படுத்தி ஆர்ஜென்டீனா இந்த வெற்றியைப் பெற்றது. ஆர்ஜென்டீனா உலகக்கோப்பையைக் கைப்பற்றியது இது ஐந்தாவது முறையாகும்.

# வேகப்பந்து வீச்சாளர்கள் உருவாக்கப்படுவதில்லை பிறக்கும்போதே கூடப்பிறப்பது - டென்னிஸ் லில்லி



வேகப்பந்து வீச்சாளர்கள் உருவாக்கப்படுவதில்லை. பிறக்கும்போதே திறமை சேர்ந்து வருகிறது என்று அவுஸ்திரேலிய வீரர் டென்னிஸ் லில்லி கூறியுள்ளார்.


தற்போது டென்னிஸ் லில்லி சென்னைக்கு சென்றுள்ளார். இதனிடையே அவர் நேற்று முன்தினம் பெங்களூரிலுள்ள தேசிய கிரிக்கெட் அகடமிக்குச் சென்றார். அங்கு இரண்டு மணி நேரம் தங்கியிருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர்களின் திறமையை உற்றுக் கவனித்தார். பயிற்சியாளர் கிரேக் சப்பலுடனும் ஆலோசனை நடத்தினர்.

அதன் பிறகு டென்னிஸ் லில்லி நிருபர்களிடம் பேசும்போது,

என்னுடைய இந்த வருகையின் மூலம் இந்திய அணிக்கும், எம்.ஆர்.எப்.பேஸ்பவுண்டேஷனுக்கும் இடையே நல்லுறவு ஆரம்பித்து இருப்பதாக நான் கருதுகிறேன். எல்லோரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு ஒரு வலிமைமிக்க இந்திய அணியை உருவாக்குவோம் என்று கூறினார்.

அப்போது நிருபர்கள் இந்தியாவில் ஏன் ஒரு சொகைப் அக்தர், பிரெட்லீ போன்ற சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க முடியவில்லை? என்று கேட்டார்கள். அதற்குப் பதில் அளித்த டென்னிஸ் லில்லி, வேகப்பந்து வீச்சாளர்களாகிய நாங்கள் உருவாக்கப்படுவதில்லை. நாங்கள் பிறக்கும்போதே அப்படி பிறக்கிறோம் என்று தெரிவித்தார்.

உலகக் கோப்பை தகுதிச் சுற்று கரப்பந்துப் போட்டிகள் சென்னையில் நடந்து வருகின்றது. இதில் இந்தியா- அவுஸ்திரேலிய அணிகள் மோதின. இந்திய வீரர் ராஜீவ் அடிக்கும் பந்தை தடுக்கும் அவுஸ். வீரர்கள். இப்போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.



# நட்வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது




மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பங்களாதேஷம் இடையேயான மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடந்தது.

இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பாடப் பணித்தது.

அதன்படி முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியினரின் ஆக்ரோஷ பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டைப் பறிகொடுத்தது. இதனால், அந்த அணி 48.5 ஓவர்களில் 196 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

197 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களம் புகுந்த இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.



ரெஸ்கொதிக் ஆறு ஓட்டத்துடனும், ஸ்ரோஸ் இரண்டு ஓட்டத்துடனும், வோகன் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், பீட்டர்சன் ஆறு ஓட்டத்துடனும், பிளின்டொப் எட்டு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். 9.2 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே அந்த அணி எடுத்தது.

எனினும் பின்னர் வந்த கொலின்வூட்டும், ஜோன்சும் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். கொலின்வூட் 53 ஓட்டத்துடனும், ஜோன்ஸ் 71 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். ஜோன்ஸ் ஆட்டமிழந்தபோது இங்கிலாந்து அணியின் எண்ணிக்கை ஏழு விக்கெட் இழப்புக்கு 161ஆக இருந்தது.

ஜோன்ஸ் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து ஆட்டத்தின் முடிவு மதில்மேல் பூனையானது. பின்னர் வந்த வீரர்களும் பொறுப்புடன் ஆடியதால் கடைசி பந்து வரை பரபரப்பாக இருந்தது. இங்கிலாந்து 50ஆவது ஓவரில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 196 ஓட்டம் எடுத்தது. இதனால் ஆட்டம் எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.



# பிரேசில் கால்பந்து வீரர் ராபின்கோவுக்கு கழக நிர்வாகம் கடும் அபராதம்

பிரேசில் கால்பந்து அணி வீரர் ராபின்கோவுக்கு அவர் ஆடிவரும் கழக நிர்வாகம் கடும் அபராதம் விதித்துள்ளது. பிரேசில் கால்ப்பந்து அணியின் முன் கள வீரர்களில் ஒருவர் ராபின்கோ. அந்த அணியின் நட்சத்திர வீரர்களான றொனால்டோ, றொனால்டினோ, அட்ரியானோ ஆகியோர் வரிசையில் ராபின்கோவும் சிறப்பாக ஆடிவருகிறார்.

21வயதான ராபின்கோ பிரேசிலிலுள்ள சான்டோஸ் கழகத்தில் ஒப்பந்தத்தில் இருக்கிறார். அவரது ஒப்பந்த காலம் 2008ஆம் ஆண்டு வரை உள்ளது. இந்த நிலையில் ஜேர்மனியில் நடந்த கான்பெடரேஷன் கோப்பை போட்டியில் பிரேசில் அணி 4-1என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றதும் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ராபின்கோ, ஸ்பெயினில் உள்ள பணக்கார கழகமான ரியல்மாட்ரிட்டில் ஒப்பந்தம் கையெழுத்திட இருப்பதாக நம்பிக்கை தெரிவித்தார்.

இதனால், சான்டோஸ் கழக தலைவர் மார்செலோ டெக்ஸ்ரா கடும் கோபத்துக்கு ஆளாகி இருக்கிறார். ராபின்கோவின் திடீர் முடிவால் அதிர்ச்சி அடைந்துள்ள அவர் ராபின்கோ எங்கள் கழத்தில் 2008ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். அவரை எந்தக் கழகம் ஒப்பந்தம் செய்ய நினைத்தாலும் எங்களுக்கு ரூபா 225 கோடி அபராதம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.



### சிந்தனைக்கு



சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எங்கள் தேசத்தில் நாங்கள்..!

சிறிலங்கா ஆயுதப்படையின் அராஜகத்தால் மற்றுமொரு உயிர் இழக்கப்பட்டுள்ளது. மீன்பிடித்தொழிலுக்குச் சென்ற அப்பாவி இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தால் மின்சாரம் பாய்ச்சப்பட்ட முட்கம்பி வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார். பாதுகாப்பு என்ற பெயரில் சிறிலங்கா ஆயுதப்படையின் மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகளில் மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது என்பது சிறிலங்கா படைத்தரப்பில் ஏற்கனவே எச்சரிக்கப்பட்டதொரு விடயமல்ல. அதுமட்டுமல்ல, பாதுகாப்பு என்ற பெயரில் மின்சாரம் பாய்ச்சப்படுதல் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க தொரு விடயமுமல்ல.

கடற்கரையோர காவலரண்களைத் தாண்டியே மீனவர்கள் கடலுக்குச் செல்கின்றனர், திரும்புகின்றனர். இந்நிலையில் மிகவும் ஒடுக்கமான இப்பாதைகளின் முட்கம்பி வேலிகளில் மின்சாரம் பாய்ச்சப்படுதல் என்பது மிருகத்தனமான செயலாகும். தவறுதலாகக் கூட ஒரு தொழிலாளி முட்கம்பி வேலியில் பட்டுவிட்டால் மின்சாரம் அவரைப் பலியெடுத்துவிடும்.

இது ஒடுக்குமுறையின் உச்சமானதொரு நடவடிக்கை எனின் மிகையாகாது. பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இம் மிலேச்சத்தனமான நடவடிக்கையானது தமிழ்மக்கள் மீது எந்தளவிற்கு ஒடுக்குமுறையை சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மேற்கொள்ள முற்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடாகவுள்ளது.

சிறிலங்கா இராணுவம் யுத்தநிறுத்த காலத்திலும் உசார்நிலையில் இருப்பதும், தனது பாதுகாப்பு ஏற்பாடுகளில் தளர்வு எதையும் மேற்கொள்ளாததோடு, மக்களின் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்குக் கூட பெரும் இடையூறுகள் விளைவிப்பதும் தெரிந்ததொன்றே. இந்தவகையில் யாழ். குடாநாட்டு இராணுவக்கட்டுபபாட்டிலுள்ள கரையோரப்பகுதிகள் யாவற்றையும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் மக்களின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளமையும் தெரிந்ததே.

கரையோரப்பகுதியிலும் சரி, உட்பகுதியிலும் சரி உயர் பாதுகாப்பு வலயம் என்பது படையினரின் முழு ஆக்கிரமிப்பில் உள்ளமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளமையும் அறியப்பட்டதொன்றே. இதேவேளை இவற்றை அகற்றக்கோரி மக்கள் பலபோராட்டங்களை நடாத்தியும் பயன்கிட்டவில்லை. இந்த வகையில் கரையோரங்களில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காவல்வேலியும் காவலரண்களும் மீனவர்களின் சுதந்திரமான தொழில் நடவடிக்கையையும்,அன்றாடநடவடிக்கையையும் பாதிப்பவையாகவுள்ளன. ஆனால் சிறிலங்கா படைத்தரப்பு இவ்விடயத்தில் எத்தகைய இணக்கப்பாடான போக்கிற்கும் தயாராக இல்லை. அதாவது தமது சொந்த மண்ணில்இருந்து தமது கடற்பிரதேசத்திற்குள் மீன் பிடிக்கச்செல்வதற்கு ஆக்கிரமிப்புப்படைகள் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளமை மிகவும் துரதிர்ஸ்ரம் பிடித்ததொரு செயலாகும்.

மேலும் இக் காலப்பகுதி யுத்தம் நிகழும் காலப்பகுதியும் அல்ல. இராணுவத்தினர் உசார்படுத்தப்பட்டிருப்பினும் முட்கம்பிவேலிகளில் மின்சாரம் பாச்சப்பட்டிருப்பது தேவையற்றதொன்று. இதுபாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஒடுக்குமுறைச் செயலாகும்.

“மூக்குள்ளவரை சளி இருக்கும் என்பது போல், சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகப்பகுதியில் நிலைகொண்டு இருக்கும் வரையில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணம் இருக்கும். ஏனெனில். ஆக்கிரமிப்பாளர்களுக்கு மக்கள் குறித்து எந்தவித கரிசனையும் கிடையாது. தமது அதிகாரத்தை நிலைநாட்டுவது மட்டுமே அவர்களின் ஒரேஒரு குறிக்கோள். ஆகையினால் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக அற்பத்தனமான விடயங்களுக்காகக் கூட மக்களைக் கொன்றுகுவிக்க அவர்கள் தயங்கப்போவதில்லை.

ஆகையினால் மின்சாரக்கம்பிகளில் சிக்குண்டு இறத்தல், துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாதல், இராணுவ வாகனங்கள் மோதி பலியாதல் போன்ற சம்பவங்கள் இடம்பெறாது தவிர்க்க வேண்டுமானால் முதலில் இராணுவம் தமிழர்தாயகப்பகுதியில் இருந்து வெளியேற்றப்படுதல்வேண்டும். இராணுவத்தின் தேவைக்கென அமைக்கப்பட்டுள்ள காவலரண்கள், முட்கம்பிகள் வேலிகள் அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும்.

மறுவளமாகக் கூறுவதானால் எங்கள் தேசத்தில் நாங்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், தொழில்செய்வதற்குமான சூழ்நிலை உருவாகவேண்டும். எமது கடற்பரப்பில் எவரின் அனுமதியும் இன்றி சுதந்திரமாக நாம் சென்று வருதல்வேண்டும். இதற்குச் சிறிலங்கா ஆயுதப்படை எமது மண்ணில்இருந்து வெளியேற்றப்படவேண்டும்.

# வெலிக்கந்தவில் புலிகள் மீதான தாக்குதலை பெரிதுபடுத்தத் தேவையில்லையாம்!

## - இராணுவப் பேச்சாளர் தயாரத்னாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

வெலிக்கந்தவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தொடரணி மீது நடாத்தப்பட்ட தாக்குதலை பெரிதுபடுத்தத் தேவையில்லை என்று சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தயாரத்னாயக்க அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் விதித்துள்ள கெடு குறித்து நாங்கள் ஆச்சரியப்படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில்தமிழீழ அரசியல்துறைப்போராளிகளுக்கு உரிய பாதுகாப்பு அளித்து வருகிறோம்.

வெலிக்கந்தவில் இராணுவப் பாதுகாப்பு அதிகமாகஇருந்ததால் தான் கண்ணிவெடித் தாக்குதல் இலக்கிலிருந்துதப்பியது. மூன்றாண்டுகளுக்குப்பின் நடைபெற்றுள்ள இந்த ஒரு தாக்குதலைப் பெரிதுபடுத்தத்தேவையில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் கூடுதல் பாதுகாப்புக்கோரினால், தேவைப்படடால் அப்பாது காப்பை அளிப்போம் என்றார் அவர்.

# சந்திரிகா-தயாசந்தகிரி மோதல் நீடிப்பு; குழப்ப நிலையில் சிறிலங்கா கடற்படை!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் முப்படைகளின் தலைமை அதிகாரியான தயாசந்தகிரிக்கும் இடையேயான முறுகல் நிலை வெளிப்படையாக வெடித்துள்ள நிலையில் சிறிலங்கா கடற்படையினர் பாரிய குழப்பத்தில் மூழ்கிப் போயுள்ளனர்.

திருமலை திடீர் புத்தர் சிலையை நிறுவிய முச்சக்கர வாகன ஓட்டுநர் சங்கத்தை பின்னணியிலிருந்து இயக்கியதாகக் கூறப்படும் கிழக்குப் பிராந்திய சிறிலங்கா கடற்படைத் தளபதி சரத் வீரசேகர உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் சிலரை கடந்த மாதம் மத்தியில் தயாசந்தகிரி இடமாற்றம் செய்ய உத்தரவிட்டார்.

ஆனால் தயாசந்தகிரியின் இடமாற்ற உத்தரவுகளை நிராகரித்த சனாதிபதி சந்திரிகா கடந்த மாத இறுதியில் தயாசந்தகிரியின் இடமாற்ற உத்தரவுகளை இரத்து செய்து புதிய உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவுகள் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது. இதைச் செயற்படுத்த வேண்டிய நிலையில் தயா சந்தகிரி பிரிட்டன் பயணம் மேற்கொண்டு விட்டார்.

அதே நேரத்தில் வெலிக்கந்தவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தொடரணி மீதான தாக்குதல் நடைபெற்றதால் தமிழீழ விடுதலைப்புலிகள் கெடு விதித்துள்ள இச்சூழலில் தயாசந்தகிரியை உடனே நாடு திரும்புமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டார்.

இன்று கொழும்பு திரும்ப திட்டமிட்டிருந்த தயாசந்தகிரி நேற்று முன்தினமே திரும்பிவிட்டார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வசந்த கரனகொட இன்று முதல் பொறுப்பேற்கவுள்ளார். அவர் திருமலை மாவட்ட படையினர் மற்றும் சிறிலங்காப் பொலிசாரின் ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதில் அதிருப்தியடைந்த தயாசந்தகிரி இதுவரை சனாதிபதியின் உத்தரவை நடைமுறைப்படுத்த எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதேநேரத்தில் தயாசந்தகிரியின் பல்வேறு நடவடிக்கைகளால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் போல் கடற்படையின் மூத்த அதிகாரிகளும், படைப்பிரிவினரும் கூட கடும் விசனத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அவருக்கு அடுத்த நிலை அதிகாரிகளைப் புறந்தள்ளுவதில் தொடர்ந்து அவதானமாக இருக்கும் கடற்படை அதிகாரிகள் ஓகஸ்ட் 31 வரை அதாவது தயாசந்தகிரி ஓய்வு பெறும் வரை பொறுத்துக்கொள்வது என்று முடிவு செய்துள்ளனர்.

தயாசந்தகிரிதான் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளிலேயே அதிக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டவர் என்பதைச்சுட்டிக்காட்டும் அதிகாரிகள் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

அமெரிக்காவில் ஓகஸ்ட் 24 முதல் 26 ஆம் திகதி வரை ஆசிய பசுபிக் நாடுகளின் பாதுகாப்புத்தொடர்பான மாநாடு நடைபெறவுள்ளது. இது தொடர்பாக சிறிலங்கா சார்பில் யார் பங்கேற்வுள்ளார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் சிறிலங்கா இராணுவத்திடம் கேட்டபோது, தயா சந்தகிரி தானே அந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதாகக் கூறியுள்ளார்.

தயாசந்தகிரி மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களிலேயே அதிகமாக அமெரிக்காவுக்கு நான்கு முறை பயணம் செய்துள்ள நிலையில் தயாசந்தகிரி பெயரை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்து அவருக்கு அடுத்த நிலையில் உள்ள மோகன் விஜயவிக்கிமவை பரிந்துரைத்தது.

தயாசந்தகிரி ஓய்வுபெறும் நிலையில் மோகன் விஜயவிக்கிமதான் அடுத்த கடற்படை அதிகாரியாக பொறுப்பேற்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

சனாதிபதியும், கடற்படை தளபதியும்,கடற்படை அதிகாரிகளும் ஆளுக்கொரு திசையில் முரண்பட்டு செயற்பட்டு வருவதால் யார் பக்கம் நிற்பது, யார் கட்டளைக்கு கீழ்ப்படிவது என்ற குழப்பத்தில் சிறிலங்கா கடற்படையினர் உள்ளனர்.

# ஆட்சியமைக்க ரணிலை அழைக்கவில்லை; சனாதிபதி செயலகம் விளக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஆளும் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறிய நிலையில் அரசு அமைக்க வருமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்ததாக வெளியான செய்திகளை சனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியை ஆளும் அரசில் பற்கேற்க வேண்டும் என்றோ ஐம்பது வீதம் அமைச்சுப் பொறுப்புக்களை அளிப்பதாகவோ சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க உறுதி அளிக்கவில்லை. இது தொடர்பாக நிதி அமைச்சர் சரத்அமுனுகம எவ்வித பேச்சுக்களையும் நடத்த வில்லை.

ஐ.தே.க.வின் மிலிந்த மொறகொடவுடனான சந்திப்பின்போது ஆட்சியமைக்க வருமாறு ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு எதுவும் விடுக்கவில்லை.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து விவாதிக்க அமைச்சர் ஒருவர் மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்தார். அதனடிப்படையில் கடந்த மாதம் 13ஆம் திகதி சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால், அரசு அமைக்க முன்வர வேண்டும் என்றோ, ஆட்சிப் பொறுப்பில் இணைந்து அதிகாரப் பகிர்வு மேற்கொள்ள வேண்டும் என்றோ விவாதிக்கப்படவில்லை என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி நியமித்த அதிகாரிகள் அடுத்த வாரம் பதவி விலகுவர்?

(கொழும்பு)

ஜே.வி.பி அமைச்சர்களினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அடுத்த வாரமளவில் தமது பதவிகளை விட்டு விலகுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி அமைச்சர்கள் நால்வர் தமது பதவிகளை விட்டு விலகினர். இதனையடுத்து குறித்த அமைச்சுக்களின் பொறுப்புகள் இயல்பாக சனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இந்த நிலையில் ஜே.வி.பி அமைச்சர்களினால் நியமிக்கப்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட திணைக்கள பிரதானிகளே பதவி விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# புலிகளின் காலக்கெடுவை உதாசீனம் செய்தால் நாடு அபாயகரமான நிலைக்குச் செல்லும்!

### -ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வழங்கியுள்ள 14 நாள் காலக்கெடுவை அரசாங்கம் உதாசீனம் செய்யுமானால் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கேள்விக்குறியாவதுடன் நாடு அபாயகரமான நிலைக்குச் செல்லும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பயணம் செய்யும் போது விடுதலைப் புலிகளின் பாதுகாப்பை இராணுவத்தினரே உறுதிப்படுத்த வேண்டும் என யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டபூர்வமன அரசாங்கம் என்ற வகையில் அதனை உறுத்திப்படுத்த வேண்டியது தற்போதுள்ள அரசின் கடமை எனவும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# வீரவணக்க கூட்டமும் நினைவுக்கல் திரைநீக்கமும்

கடந்த 03.04.1996 அன்று யாழ். வடலியடைப்பு அரசடியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவவைத் தழுவிக் கொண்ட கப்டன் நித்தியா (தங்கராசா சாரதா கீரிமலை வீதி,சித்தங்கேணி) என்ற மாவீரரின் நினைவுக்கல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது.

இம் மாவீரரது திருவுருப்படம் நேற்று பி.ப 3.30 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு நீர்வேலி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பரிதி தலைமையில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

முதலில் மாவீரரின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை தாயார் ஏற்றிவைக்க சகோதரன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து செம்பரிதியின் தலைமை உரை இடம் பெற்றது. வீரவணக்க உரையினை சங்கானை பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் அன்பு நிகழ்த்தினார். அடுத்து மலர் வணக்கத்தினை வலிகாமம் பிரதேசமகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பிறை ஆரம்பித்து வைத்தார். பின்னர் மாவீரரது நினைவுக் கல்லினை பெற்றோர் திரைநீக்கம் செய்து வைத்தனர். இந்நிகழ்வில் பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டனர்.

# 39 ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவியிலிருந்து நீக்க சந்திரிகா முயற்சி!

(கொழும்பு)

ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பட்டியலில் உள்ள 39 பேர்களை நியமிப்பதற்கு சனாதிபதியினால் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

இதனையடுத்து ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது பெரும் குழப்பத்தில் உள்ளனர்.

இதற்கு முன்னதாக ஜே.வி.பி. யினரின் சம்மதத்துடன் சகல நடவடிக்கைகளையும் சனாதிபதி மேற்கொண்டார். எதிர்க்கட்சிகளில் இருந்து அரசாங்கக் கட்சியில் இணைந்த சகலருக்கும் பிரதம நீதி அரசரின் பாதுகாப்பு நீதிமன்றத்தால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஒருவரை பதவிநீக்கம் செய்யும் அதிகாரம் பிரதம நீதி அரசருக்கு மாத்திரமே உண்டு எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சுண்டுக்குளியில் மீட்கப்பட்ட சடலம் இதுவரை உரிமை கோரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவத் தளத்திலிருந்து அரசால் ஒலிபரப்பப்படும் யாழ். சேவை வானொலி மற்றும் அரசின் தேசிய வானொலியான தென்றல் வானொலி என்பனவற்றிற்கான விளம்பரங்களை எவரும் வழங்கக் கூடாதெனவும் அவ்வானொலி நிலையங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கக் கூடாதெனவும், எல்லாளன் படை எனும் பெயரில் அனாமதேய துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்த நிலையில் அவ்வானொலி நிலையங்களின் விளம்பர முகவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் இதுவரை உறவினர்கள் எவராலும் உரிமை கோரப்படாததினால் யாழ் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

யாழ். சுண்டுக்குளிப் பகுதியில் ஜெசித்தாரா எனும் உணவு விடுதியொன்றை நடாத்தி வந்த ஜோ.எகட்டன் எனும் குறித்த நபர் இலங்கை வானொலியின் யாழ்.சேவை முகவராகவும், இலத்திரனியல் ஊடகங்கள் சிலவற்றினது விளம்பர முகவராகவும் பணியாற்றி வந்திருந்தார்.

தனது உணவு விடுதியில் சடலமாக கிடக்கக் காணப்பட்ட இவர் தொடர்பாக அயலவர்கள் வழங்கிய தகவலின் பேரில், பொலிசார் நீதவான் முன்னிலையில் விடுதியை உடைத்து சடலத்தினை மீட்டனர்.

கடந்த 29ஆம் திகதி முதல் விடுதியில் ஆள் நடமாட்டமேது மற்றிருந்த நிலையில் அயலவர்கள் அப்பகுதி கிராம சேவையாளரூடாகப் பொலிசாருக்குத் தகவல் வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பதாகவும், பழைய பூங்காவை அண்டியும் இவ்விடுதி அமைந்துள்ளது. (27)

# ஐ.தே.க வின் மக்கள் சக்தி பேரணி; நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சக்தி பேரணி நேற்று கொக்கலை வரையில் நடத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தெவுந்தரையில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி மாத்தறை மிரிச என்ற இடத்தில் நிறுத்தப்பட்டு நேற்று அங்கிருந்து முற்பகல் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்தப் பேரணி நடத்தப் படுகிறது. பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார ஸ்தம்பித நிலையைத் தவிர்க்கும் வகையில் உடனடியாக சனாதிபதித்தேர்தலை நடத்தவேண்டும் எனக் கோரியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பன்னிரண்டாம் திகதி வரை பேரணி இடம் பெறும். (32)

## முதலமைச்சராக மீண்டும் கூரே

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் முதலமைச்சராக மீண்டும் ரெஜினோல்ட் கூரே நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஆதரவு உறுதிமொழி கிடைத்த பின்னர் ஆளுநர் அலவி மௌலானா முன்னிலையில் ரெஜினோல்ட் கூரே பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஏற்கனவே 11 நாட்கள் மாத்திரம் ஆளுநராக பதவி வகித்த நந்தன மெண்டிஸ் நேற்று முன்தினம் தமது பதவியை இராஜினாமா செய்தார் என்பது தெரிந்ததே. (32)

# விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆனி மாதத்திற்குரிய 124ஆவது குரல் வெலிகந்தவில் புலிகள் மீதான தாக்குதல், சிங்களப் படைகளின் துரோகச் செயல் என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

உடன்பாட்டைச் செயற்படுத்த சர்வதேசச் சமூகம் முன்வரவேண்டும் எனச் சொல்லும் ஆசிரியத் தலையங்கத்துடன் வரும் இவ்வேடு க.வே. பாலகுமாரன் எழுதிய காலப் பாழில் நழுவிய கணங்கள் என்ற அரசியல் கட்டுரையும், புலிகளின் அரசியல் சமரும் சமாதான கால இழப்புக்களும், ஆறு மாதத்தின் பின் யாருக்காக வந்தது கட்டமைப்பு? உரிமையின் பொருட்டற்ற சுனாமிக் கட்டமைப்பும் இறைமை பற்றிய கூக்குரலும் போன்ற அரசியல் கட்டுரைகளுடன் தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்களக் குடியேற்றங்கள் என்ற தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியை துண்டாட விளையும் குடியேற்றங்கள் பற்றிய தொடர் கட்டுரையின் 'திருமலை நகரக் குடியேற்றங்கள், பகுதியும், கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய புத்தர்சிலையும் தமிழீழ மண்பறிப்பும்' என்ற கட்டுரையையும் தாங்கி இவ்வேடு வருகின்றது. மற்றும், உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வோடு வெளி வருகின்றது.

# தாயகத் தயாரிப்பான "கிச்சான்" குறும்திரைப்படம் கனடாவில் வெளியீடு

(ரொரன்ரோ)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பாராட்டுக்களைப் பெற்ற தாயகக் கலைஞர்களின் உருவாக்கமான கிச்சான் என்ற குறும்திரைப்படம் நேற்று கனடாவில் ஈழமுரசு இனியமாலை 2005 நிகழ்வின் போது விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழின உணர்வாளருமான தொல். திருமாவளவன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இத் திரைப்படத்திற்கான வெளியீட்டு உரையினை தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வம் நிகழ்த்திய பின்னர் தொல்.திருமாவளவன் திரைப்படத்தின் முதற்பிரதியை வெளியீட்டு வைக்க, தாயகத்திலிருந்து சென்ற ஊடகவியலாளர் ஐங்கரநேசன் பெற்றுக் கொண்டார்.

இரண்டாவது பிரதியை ரொரன்ரோவில் உள்ள பாபு கேட்டறிங் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் பாபு பெற்றுக் கொண்டார். ஏனைய பிரதிகள் ஈழமுரசு இனியமாலை நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய வணிகர்கள் மற்றும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டது. அதனையடுத்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு இக் குறும் திரைப்படம் முழுமையாகக் காண்பிக்கப்பட்டது.மிகவும் நேர்த்தியான கதையுடன், சிறப்பான இசை, கலைஞர்களின் யதார்த்த நடிப்பு, திறமையான படத்தொகுப்பு, சிறந்த இயக்கம் என எல்லா வகையிலும் சிறந்து விழங்கும் கிச்சான் திரைப்படம், ஈழத் தமிழ் திரைப்பட உலகில் புதியதோர் அத்தியாயத்தைப் படைத்துள்ளது. இத் திரைப்படத்தை வெளியிடுவதற்கு ஈழமுரசு நிறுவனத்திற்கு இரா சீடி சந்தை என்ற வணிக நிறுவனம் பல்லாயிரக்கணக்கான டிவிடிக்களை இலவசமாக உருவாக்கிக் கொடுத்துள்ளது இங்கு குறிப் பிடத்தக்கது.

இதேவேளை இத்திரைப் படத்தினை டிவிடியாக கனடா, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் இலவசமாக ஈழமுரசு நிறுவனத்தினரால் விநியோகிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கரும்புலிகள்...

நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற பிரதேச, ஊரக கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைவாக தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமக் கோட்டங்களில் கரும்புலிகள் நாள் நினைவுப்பொதுக்கூட்டங்கள், மாலை 6.30 மணிக்கு இடம்பெறும். இதில் சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கோட்ட ரீதியாக நினைவுப்பந்தல்கள், வளைவுகள் அமைத்தல் என்பனவும் கொடிகளால் அலங்கரித்து பதாதைகள் கட்டியும் எழுச்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

கரும்புலிகள் நாளன்று கோட்ட ரீதியாக நடைபெறும் நினைவு நாள் நிகழ்வுகளில் அனைத்து தமிழீழ மக்களும் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டு கரும்புலிகளை நினைவுகூரவுள்ளனர்.

பாண்டியங்குளம் துணுக்காய் பிரதேசங்களில் கரும்புலிகள் தினத்தை சிறப்புடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசங்களின் பொதுஅமைப்பினர், பொது மக்கள், அரச அரசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் பாண்டியன்குளம் பிரதேசம் பாலிநகர் பகுதி துணுக்காய் பிரதேசம் மல்லாவி நகர் பகுதிகளிலும் வீதிகளின் இரு மருங்குகளிலும் மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு பிரதான சந்திகளில் கரும்புலிகளின் ஈகங்களைச் சித்தரிக்கின்ற அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பொது இடங்களில் நினைவுப் பந்தல்கள் அமைத்து கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு நினைவு கூரப்பட்டு வருகின்றது. (24,27)

## உலகத்...

தமிழீழத் தாயகத்திற்கு அண்மையில் சென்றபோது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களைச் சந்திக்கும் அரியவாய்ப்புக் கிடைத்தது. இச்சந்திப்பின்போது தமிழகத்தில் சாதிய வெறி காரணமாக இரு தமிழர்களின் வாயினுள் மனித மலம் திணிக்கப்பட்ட நிகழ்வை மன வருத்தத்துடன் தெரிவித்த தேசியத்தலைவர் அவர்கள் இந்த கொடூரச் செயலைக் கேள்வியுற்ற நாளிலிருந்து மூன்று நாட்கள் தன்னால் உறங்க முடியவில்லை எனத் தெரிவித்தார்.

தமிழகத் தலைவர்களினால் இந்த கொடூர நிகழ்வு ஒரு பொருட்டாகக் கூட எடுக்கப்படாத நிலையில் தனது நாட்டு மக்களின் விடியலுக்காக 24 மணிநேரமும் போராடிவரும் வேளையிலும், தமிழகத்தின் எங்கோ ஓர் மூலையில் நடைபெற்ற அந்த நிகழ்வை, ஊடகங்களால் பெரியளவில் வெளிக் கொண்டுவரப்படாத நிகழ்வைப் பற்றி அறிந்து அந்த நிகழ்வின் கொடூரத் தன்மை காரணமாக தேசியத் தலைவர் அவர்கள் மூன்று நாட்கள் நித்திரை கொள்ளாது தவித்தார் என்றால் அவர் எவ்வளவு தூரம் உலகத் தமிழர்கள் மீது அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ளார் ஏன்பது வெளிப்படுகிறது. இதன் மூலம் அவர் உலகத் தமிழினத்தின் தலைவராக விளங்குகின்றார் என தொல்.திருமாவளவன் குறிப்பிட்டுள்ளார்.

## வீரச்சாவு....

தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர் விஜையசுந்தரம் தங்கராசா-விஜையசுந்தரம்(அழகன்) 4 ஆம் வட்டாரம், கட்டைப்பறிச்சான் மூதூர், சின்னக்குளம், பள்ளிக்குடியிருப்பு மூதூர்) ஆகியோரே வீரச்சாவடைந்துள்ளனர். இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## புலிகளின்...

களுக்குமிடையே நாளை மறுதினம் சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக கொழும்பு படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் நடைபெறவுள்ள கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்டுடனான சந்திப்பில் இராணுவ மற்றும் கடற்படை உயரதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை இதுதொடர்பாக சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புச் சபை இவ்வார இறுதியில் கூடி ஆராயவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.